# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 18.09.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







## வவுணதீவு இளைஞன் பொலிஸாரால் தாக்கப்பட்டமை

# பாராளுமன்ற உறுப்பினருக்கே அலட்சியப் பதில் எனில் தாக்குதலுக்குள்ளானவரின் நிலை எவ்வாறு இருக்கும்?



### சாணக்கியன் கேள்வி



(துதிமோகன்)

அண்மையில் வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸாரினால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட இளைஞனின் விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கே பொலிஸாரினால் அலட்சியமான பதில் எனில் சாதாரண பொதுமக்களின் நிலை என்ன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கடந்த 05ம் திகதி வவுணதீவு பிரதேசத்தில் வைத்து பொலிஸாரினால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட இளைஞனை இன்றைய தினம் பார்வையிடச் சென்று அவரின் விடயங்கள் தொடர்பில்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது

### ஐ.நா.விசேட அறிக்கையாளர் தெரிவிப்பு



கடந்த 18 மாதங்களில் இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது எனவும் பொறுப்புக்கூறல் விடயங்களிலும் முன்னேற்றமில்லை எனவும் ஐ.நா சபையின் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீளிடம்பெறாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான விசேட அறிக்கையாளர் ஃபெபியன் சல்வியொலி தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மனித உரிமையின் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ஐ.நா.வில் உரையாற்றுவார்



நாட்டின் மனித உரிமை தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மாநாட்டு அமர்வில் உரையாற்றவுள்ளார் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அதேவேளை, அது தொடர்பில் முன்வைக்கப்படும் தவறான கருத்துக்களைச் சரி செய்வது தொடர்பிலும் அவர் கவனம் செலுத்துவார் என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் குறிப்பிட்டார்.

கொவிட் வைரஸ் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவது, பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியான வீழ்ச்சியை சரி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் உரையின்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

மாநாட்டில் கலந்துகொள்ளும் அரச தலைவர்கள்,

02 ஆம் பக்கத்தில்...

## கோரோனாவைச் சாட்டி மீண்டும் ஒரு தடையுத்தரவு

### பிரசன்னா இந்திரகுமார்



மீண்டும் மீண்டும் இந்த அரசு கொரோனாவைச் சாட்டி எம் நினைவுகளைத் தடுக்க எண்ணுகின்றது. அடக்க அடக்க அதிகரிக்குமே தவிர எம் நினைவுகள் என்றும் அடங்காது. இவ்வாறானா செயற்பாடுகள் மூலம் மேலும் தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயற்பாடுகளையே அரசு மேற்கொள்கின்றது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவரும், கிழக்கு

02 ஆம் பக்கத்தில்...

## எமது இதயத்தால் அனுஸ்டிக்கும் அஞ்சலியை எத்தடையுத்தரவுகளும் தடுக்க முடியாது



(துதிமோகன்)

எத்தனை கெடுபிடிகள், எத்தனை நீதிமன்றத் தடையுத்தரவுகள் வந்தாலும் எமது இதயத்தால் அனுஸ்டிக்கும் அஞ்சலியை எதுவும் தடுக்க முடியாது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்துள்ளார்.

15ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னாள் உறுப்பினர் திலீபனின் நினைவேந்தலை அனுஸ்டிப்பது தொடர்பில் வெல்லாவெளிப் பொலிஸாரினால்

02 ஆம் பக்கத்தில்...



## மண் மாபியாக்களின் கூடாராமா மட்டக்களப்பு?

### கொந்தளித்த பள்ளத்துச்சேனை கிராம மக்கள்

(நமது நிருபர்)

மண் மாபியாக்களின் கூடாராமாக மாறிவரும் மட்டக்களப்பு மண் வளத்தைப் பாதுகாக்க எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு நிறுத்துமாறு கிரான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பள்ளத்துச்சேனை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் கோட்டும் மழையில் ஊரடங்கு சட்டத்தை மீறி மது கொள்வனவில் மதுப்பிரியர்கள்



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் திருகோணமலையில் அனைத்து மதுபானசாலைகளும் திறந்து வியாபாரம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் அனைத்து மதுபானசாலைகளையும் நேற்று (17) முதல் திறப்பதற்கு கலால் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியான

02 ஆம் பக்கத்தில்...

## ரிசாத் பதியுதீனின் மனைவி மற்றும் மாமனாருக்கு பிணை



முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் மனைவி மற்றும் மாமனாருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

ரிஷாத்தின் வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில்

02 ஆம் பக்கத்தில்...










# அம்பாறை தமிழர்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்த ஒருவர் இல்லை எனும் கவலையை போக்குவேன்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லை எனும் கவலையை போக்குவேன் என அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமாக டபிள்யு.டி.வீரசிங்க தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பால் கட்சி பேதமின்றி அனைத்து மக்களையும் அரவணைத்தே சகல அபிவிருத்தி திட்டங்களும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் எனவும் கூறினார்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில்; பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இன்று இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ்'கம சமக பிலிசதரக்' எனும் 2022 ஆம்; ஆண்டில் இடம்பெறவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் ஆராயும் பணிகள் பிரதேச செயலகங்கள் தோறும் இடம்பெற்று வருகின்றன.



இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் முதற்கட்டமாக 3 மில்லியனுக்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளன.

இவற்றை தயாரிப்பது தொடர்பிலும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெளிவுபடுத்தினாடர்.

மேலும் பௌதீக அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை அளிக்காமல் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேநேரம் அபிவிருத்தி தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் பிரதேச கிராம மட்ட குழுவில் அங்கத்துவம் பெறுகின்ற அரசியல் மற்றும் அரச அதிகாரிகள் மதகுரு கிராம மட்ட தலைவர்கள் தொடர்பிலும் குறிப்பிட்டார்.

அத்தோடு கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச அபிவிருத்திக்கும் மக்கள் நலனில் கருத்திற்கொண்டு செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் எனும் அடிப்படையிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமாக டபிள்யு.டி.வீரசிங்க அவர்களை பாராட்டி பிரதேச செயலாளர் வி.பபாகரன் வாழ்த்துப்பா ஒன்றினையும் நன்றியுணர்வோடு வழங்கி வைத்தார்.

கலந்துரையாடலில் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் கணக்காளர் க.பிரகஸ்பதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கோவிட் 19 சிவப்பு பட்டியலில் இருந்து இலங்கை நீக்கம்

எதிர்வரும் செப்டம்பர் 22 ஆம் திகதி முதல் ஐக்கிய இராச்சியம் இலங்கையை தனது கொவிட் 19 சிவப்பு பட்டியலில் இருந்து நீக்கவுள்ளது.

இலங்கைக்கான உயர் ஸ்தானிஜகஜ ராஜலயம் இதனை குறிப்பிட்டுள்ளது.

கொவிட் நோய்த் தொற்று பரவக் கூடிய ஆபத்தான நாடுகளின் வரிசையைக் கொண்ட சிகப்பு பட்டியலில் ஐக்கிய இராச்சியம் இலங்கையின் பெயரை கடந்த ஜுன் மாதம் 8 ஆம் திகதி இணைத்துக் கொண்டது.

சிகப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட நாடுகளிலிருந்து ஐக்கிய இராச்சியத்திற்கு பயணிக்க வேண்டுமாயின் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர் என்றாலும் கொவிட் பரிசோதனை நடாத்திக்கொள்ள வேண்டியது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளிலிருந்து பயணிப்போர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என ஐக்கிய இராச்சியம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரிசாத் பதியுதீனின் மனைவி மற்றும்

சிறுமி ஹிஷாலினி தீக்காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இது தொடர்பான வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போதே ரிஷாத் பதியுதீனுடைய மனைவி மற்றும் மாமனாரை பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய பிறப்பித்துள்ளார்.

## திருமலையில் கொட்டும் மழையில் ஊரடங்கு சட்டத்தை மீறி மது

செய்தியினை அடுத்து இவ்வாறு மதுபான சாலைகள் திறந்து மதுபானங்கள் விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, வைன் ஸ்டோர்ஸ் மற்றும் பியர் விற்னை நிலையங்கள் திறக்கப்பட்டதாகவும் இதன்போது, திருகோணமலை நகரில் திறக்கப்பட்ட மதுபானசாலைகளில் மதுப்பிரியர்கள் கொட்டும் அடைமழையில் நீண்ட வரிசையில் காத்திருந்து மதுபான போத்தல்களை கொள்வனவு செய்ததாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு திறக்கப்பட்ட மதுபானசாலைகள் சுகாதர நடைமுறையினை மீறி திறக்கப்பட்டதாகவும் மதுபிரியர்கள் சுகாதார நடைமுறையினை மீறி கூட்டமாக கொள்வனவில் ஈடு பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்

இவ்வாறு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய தேவையினிமிர்த்தம் மக்கள் வெளியில் செல்வது சவாலாக இருக்கும் நிலையில் இவ்வாறு மதுபாணசாலைகளை திறந்து இவ்வாறு ஒன்று கூடி கொள்வனவு செய்வது நாட்டை இன்னும் பாரதூரமான நிலைமைக்கு கொண்டுசெல்லும் எனவும் அரசாங்கம் இது தொடர்பாக ஒரு திட்டத்தினை செயல்படுத்த வேண்டுமெனவும் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

## மண் மாபியாக்களின் கூடாராமா மட்டக்களப்பு?

இந்த பிரதேசத்தில் எந்தவித அனுமதியும் இல்லாமல் அதிகளவான மண் அகழப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான மண் அகழ்வு இடம்பெறுவதனால் எதிர்காலத்தில் அப்பிரதேச மக்கள் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இடம்பெயரக் கூடிய வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்த மண் அனைத்தும் வெளிமாவட்டங்களுக்கு கொண்டுசெல்லப்படுவதாகவும் இதற்கு பின்னால் அரசாங்கம் சார்ந்த அரசியல்வாதிகள் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

எனவே இந்த சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகள் அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர் உட்பட மண்வள உத்தியோகத்தர்கள் கவனம் எடுத்து உடனடியாக இதைத் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## எமது இதயத்தால் அனுஸ்டிக்கும் அஞ்சலியை

மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கமைவாக களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழினத்திற்காக அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை நீத்த எங்கள் அண்ணன் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவு தினத்தை இவ்வருடம் அனுஸ்டிப்பதற்கான ஏற்பாடுகள் எங்களிடம் இருக்கவில்லை. ஏனெனில் இந்த அரசாங்கத்தின் இத்தகு அடக்குமுறையான ஆட்சியில் எவ்வித நினைவேந்தல்களும் செய்ய முடியாது என்பது நாம் அறிந்த விடயமே. தமிழர்களின் விடயம் தொடர்பில் எவ்விழிகளில் அடக்கி ஒடுக்க முடியுமோ அத்தனை வழிகளையும் இந்த அரசாங்கம் கையாளுகின்றது. அதற்கு தற்போதைய கொரோனா நிலைமையும் கைகொடுக்கின்றது. கொரோனாவைக் காரணம் காட்டி தமிழர்களின் நிகழ்வுகளை மாத்திரம் அடக்க முயற்சிக்கின்றது.

என்ன இருந்தாலும், எத்தனை கெடுபிடிகள் வந்தாலும், எத்தனை நீதமன்றத் தடையுத்தரவுகள் வந்தாலும் எமது இதயத்தால் அனுஸ்டிக்கும் அஞ்சலியை எதுவும் தடுக்க முடியாது. அவ்விழிமுறைகளையே தற்போதைய நிலையில் நாம் கையாள எண்ணியுள்ளோம்.

தற்போதைய நிலையில் மக்களைத் திரட்டி அவர்களையும் கொவிட் அல்லலுக்குள் உட்படுத்தும் எண்ணமும் எமக்கில்லை. எம்மை நம்பும் எம் உறுப்பினர்களை அரசின் கொடூர பிடிக்கள் சிக்க வைக்கவும் நாம் தயாராக இல்லை. ஆனால், அனைத்திற்கும் காலமும், சர்வதேசமும் பதில் சொல்லும் என்று தெரிவித்தார்.

## மனித உரிமையின் முன்னேற்றகரமான

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகத்தை தனித்தனியே சந்திப்பதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவருடன் முக்கிய பல விடயங்களை உள்ளடக்கிய பேச்சை முன்னெடுக்கவுள்ளார்.

அத்துடன் மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கைக்கு ஆதரவான பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களை சந்திக்கும் ஜனாதிபதி, அந்த தலைவர்களுடன் முக்கியமான பேச்சுகளை முன்னெடுப்பார் என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் மனித உரிமை சம்பந்தமான பல்வேறு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் தெளிவுபடுத்தவும் முன் வைக்கப்படும் தவறான கருத்துக்களை சரி செய்வதற்கும் இந்தச் சந்தர்ப்பம் முக்கியமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனாவைச் சாட்டி மீண்டும் ஒரு தடையுத்தரவு

மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளருமான பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

திலீபன் நினைவேந்தலை நினைவு கூருவது தொடர்பில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவினை மட்டக்களப்பு பொலிஸ் நிலைய அதிகாரியினால் கையளிக்கப்பட்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினத்திற்கான போராட்ட வரலாற்றின் நினைவேந்தல்களை அனுஸ்டிப்பதற்கு எதிரானவர்கள் என்று மட்டக்களப்பில் யாரும் இருக்கமாட்டார்கள். அப்படி இருக்க நினைவேந்தல்களுக்கு எதிரானவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது பொய்யான அறிக்கையாகவே தோணுகின்றது. பொலிசாரினால் நீதிமன்றத்திற்கு பொய்யான தகவல்களைச் சொல்லி தடையுத்தரவுகள் பெறப்படுகின்றனவோ எனச் சந்தேகிக்கத் தோணுகின்றது.

அடுத்து கொரோனா, தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு மாத்திரம் எவ்வாறுதான் கொரோனா பரவுகின்றதோ தெரியவில்லை. ஆளுங்கட்சி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எத்தனையோ விழாக்கள் செய்கின்றார்கள். திறக்கப்பட்ட களஞ்சியசாலைகளுக்கு இன்னுமொரு பெயர் வைத்து அதனை மீண்டும் திறக்கின்றார்கள். இந்த நிகழ்வுகளில் எல்லாம் அவர்களின் ஆதரவாளர்கள், அதிகாரிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்தும் கொள்கின்றார்கள். அப்போதெல்லாம் இல்லாத கெரோனா எமது நினைவேந்தல்களுக்கு மாத்திரம் எவ்வாறு வருமோ தெரியவில்லை.

மீண்டும் மீண்டும் இந்த அரசு கொரோனாவைச் சாட்டி எம் நினைவுகளைத் தடுக்க எண்ணுகின்றது. அடக்க அடக்க அதிகரிக்குமே தவிர எம் நினைவுகள் என்றும் அடங்காது. அரசு மக்களின் மனங்களை வெல்வதை விடுத்து மீண்டும் மீண்டும் இவ்வாறானா செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்துகின்றது என்று தெரிவித்தார்.

## இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மிகப்பெரிய

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினது 48வது கூட்டத்தொடரில் இலங்கை குறித்த தமது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உண்மை மற்றும் நீதியைத் தேடுவதற்கான நடவடிக்கைகள் போதிய அளவு முன்னெடுக்கப்படவில்லை.

இந்த விடயங்கள் நிலைமாறுகால நீதி வழங்கல் செயல் முறையையும் பாதித்துள்ளன என்றும் அவர் மேலும் தனது உரையின் போது தெரிவித்துள்ளார்.

## வவுணதீவு இளைஞன் பொலிஸாரால் தாக்கப்பட்டமை

கேட்டறிந்ததுடன் அவர் தாக்குதலுள்ளாக்கப்பட்டமை தொடர்பிலான பொலிஸ் விசாரணைகள் சம்மந்தமாக வவுணதீவுப் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று வினவியிருந்தார்.

இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுணதீவு பிரதேச சபை உறுப்பினர் நாகலிங்கம், தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் லோ.தீபாகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தாக்குதலுக்குள்ளான தினம் இடம்பெற்ற சம்பவம் குறித்து இளைஞனுடனும் மற்றும் அவர் குடும்பத்தினருடனும் கலந்துரையாடியதோடு அவரது தாக்குதல் தொடர்பில் உரிய நீதி விசாரணை சம்மந்தமாகவும் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், இவ்விடயம் தொடர்பில் வவுணதீவுப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியைச் சந்தித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

கடந்த 05ம் திகதி வவுணதீவு பிரதேசத்தில் ரூபன் என்ற இளைஞர் பொலிசாரினால் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் அவர் தொடர்பிலான விசாரணைகள் எவ்விதம் முன்னெடுக்கப்படுகின்ற என்பது தொடர்பில் வவுணதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியிடம் கோரிய போது இது தொடர்பில் தன்னால் எவ்விடயங்களும் சொல்ல முடியாது என அவர் தெரிவிதுள்ளார். இது தொடர்பில் எந்த தகவல்களும் சொல்ல முடியாது எனவும் மறுத்துவிட்டார்.

ஒரு பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரி சொல்லும் பதிலா இது. கடந்த 05ம் திகதி நடந்த சம்பவம் தொடர்பில் இன்று 1%ம் திகதி வரையிலும் எந்தத் தகவலும் சொல்ல முடியாது என்றால் மக்கள் எவ்வாறு காவல் துறையை நம்புவது.

இன்று எமது மாவட்டத்தில் பொலிசாரினால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட இளைஞனுக்கு நீதி கேட்க முடியாத நிலையில் அரசாங்கத்தைச் சேர்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் இது தொடர்பில் இதுவரை அறிக்கையில் கூட ஒன்னும் சொல்ல வில்லை.

அன்மையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் அரசியற் கைதிகள் மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பிலும் அவர்கள் எதுவித மூச்சும் விடவில்லை. இவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளா மண் மாபியாக்களின் பிரதிநிதிகளா?

வவுணதீவப் பொலிஸ் அதிகாரி சொல்கின்றார் தான் இதற்குப் பதில் சொல்ல முடியாது என்று. நாட்டின் பாராளுமன்றத்தின் பிரதிநிதி ஒருவர் கேட்கும் போதே எவ்வித பதிலும் சொல்ல முடியாது என்கிறார்கள் என்றால் சாதாரண மக்களுக்க எவ்விதமான பதிலை இவர்கள் சொல்லப் போகின்றார்கள். தெலைபேசியில் கேட்கையில் நேரடியாக வாருங்கள் என்று சொல்லிவிட்டு நேரடியாக வரும் போது தகவல் சொல்ல முடியாது என்று சொல்லுகின்றார்.

தாக்கப்பட்ட நபர் ஒரு பொலிஸ் அதிகாரியின் பெயரைக் குறிப்பிடுகையில் அவரின் பெயரில் எத்தனையோ நபர்கள் இருக்கலாம் என்றும் அது தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளும் இடம்பெறவில்லை என்றும் அலட்சியமான பதில்களையே சொல்லுகின்றார்கள். இது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்களாக இல்லை.

பொலிஸார் மக்களை இவ்வாறாகக் கையாள வெளிக்கிட்டால் இந்த நாட்டில் இதற்கு மேலும் தமிழ் மக்கள் வாழ முடியாத நிலைமையே ஏற்படும்.

இந்த மாவட்ட மக்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மக்களின் பிரச்;சினைகள் தொடர்பில் கையாள்வதற்குரிய முயற்சிகளை எடுத்து வருகின்றேன். அனால் மாவட்டத்திலே அரசுடன் இருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மண் மாபியாக்கு வேலை செய்யாமல் மக்களுக்காக வேலை செய்ய முன்வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.





# அகதிகளை அரவணைத்த தேவதை




## அஞ்சலா மேர்க்கல்யேர்மனிய கான்சிலர் (அதிபர்) அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்!

## 2005, 2009, 2013, 2017 என நான்கு தடவைகள் யேர்மனியின் கான்சிலர்!

யேர்மனிய அரசியல் வரலாற்றில் கான்சிலர் என்று அழைக்கப்படும் பதவிதான் மிக உன்னதமான பதவியாகும். வேறு பல நாடுகளில் ஜனாதிபதி, பிரதமர் போல யேர்மனியில் இப்பதவிதான் நாட்டின் ஆளுமை, அதிகாரம் மிக்கவரைக் குறிக்கும் பதவியாகும். அந்த வகையில் யேர்மனியின் கான்சிலராக 4 தடவைகள் 16 வருடங்கள் பதவி வகித்த பெண்மணியான இவர் இந்த மாதம் 26.9.2021ல் நடைபெறவிருக்கும் யேர்மனிய பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்காமல் ஓய்வுபெறுகின்றார்.

யேர்மனி அரசியல் வரலாற்றில் பெண் ஒருவர் இப்பதவியை அலங்கரித்தவர் என்றால் சரித்திரத்தில் இவர் ஒருவர்தான் இடம்பிடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். 26.9.2021ல் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இவர் போட்டியிடாமல் ஓய்வெடுத்துள்ளார். இவர் அங்கத்துவம் வகித்த கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் C.D.U (Christian Democratic Union)

தலைவர் பதவியிலிருந்தும் ஏற்கனவே 2018ம்ஆண்டில் விலகி இன்னொருவருக்கு விட்டுக் கொடுத்திருந்தார். இருந்தும் இவர் கட்சியின் தலைவராக 2000 2018 வரை 18 வருடங்கள் தலைவராகவும் இருந்திருக்கிறார்.












இவர் தனது 16 வருட பதவிக்காலத்தில் பாராளுமன்றத்திலோ பொதுமக்களிடத்திலோ பெரிதளவில் எதிர்ப்புகளைச் சந்தித்தவரல்ல. மென்போக்கைக் கொண்டிருந்த இவர் மக்கள் மத்தியிலும் உலகத் தலைவர்கள், ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய யூனியன், ஐக்கியநாடுகள் சபை, வல்லரசு நாடுகள், நேட்டோ நாடுகள்அணி என அனைத்துத் தரப்பிலும் பாராட்டப்பட்ட ஒருவராகவே வலம்வந்திருக்கிறார். அந்த அளவுக்கு அவரின் நிர்வாகச் செயற்பாடு, உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் உலக மக்களைக் கவர்ந்தன என்றே கூறலாம்.

உலக நாடுகளில் மிகவும் பலம்பொருந்திய, பொருளாதார வலுவுடைய நாடாக யேர்மனி இன்றும் விளங்குகின்றது. இந்த நாட்டின் ஆட்சியைக் கொண்டுநடாத்துவது இலேசான விடையமல்ல. ஆனால் இவர் பெண்ணாக இருந்தும் ஆளுமை, தோழமை, நிர்வாகச் சிறப்பு, ஜனநாயகப் பண்புகளைக் கொண்டு இந்தநாட்டு மக்களை மட்டுமல்ல வெளிநாட்டு அகதிகளையும் உள்வாங்கி மனிதநேயம் மிக்கவர் என்பதையும் நிரூபித்திருக்கிறார். உலகத் தலைவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறார்.

இவர்தனது பதவிக்காலத்தில் பல நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்திருக்கிறார். வெளிநாட்டு அகதிகளின் வரவே மிகப்பெரும் நெருக்கடியாக அமைந்தது. யேர்மனியில் முஸ்லீம்கள், இஸ்லாம் பயங்கரவாதம், வலதுசாரிகளின் போராட்டம், அரசியல் எதிரிகளின் தாக்கம், ரஷ்ஷியா தனது அண்டைநாடுகளை ஆக்கிரமித்த விடையம், வெளிநாட்டுக்கொள்கை, குடும்பநல விவகாரம், அணுசக்தி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, உலகநாடுகளின் போர்ச்சூழல் என்றும் மேலாக கோவிட்19 கொரோனா நெருக்கடிகளையும் எதிர்கொண்டாலும் மக்கள் செல்வாக்கை இழக்காத நாட்டின் தலைவராகவே தனது பதவிக்காலத்தை நிறைவு செய்திருக்கிறார்.

ஏன் நமது இலங்கைவாழ் அகதிகள் 1980ம் ஆண்டுக் காலப்பகுதியிலிருந்து இற்றைவரை சுமார் 40 வருடங்கள் கடந்தும் அகதிகளாக வருவோருக்கு தஞ்சம் அளித்து, பாதுகாப்பு, உணவு, இருப்பிட வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு செய்துதந்து, இந்த நாட்டுக் குடியுரிமையும் வழங்கி சிறப்பாக வாழவைத்த இந்த அம்மையாரை நாம் எப்பொழுதும் நினைவுகூர வேண்டும். நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். நமது மக்கள் மட்டுமல்ல உலக நாடுகள் எங்கிருந்தும் பல ஆயிரம் அகதிகளாக இந்த நாட்டுக்குள் வந்தாலும் அத்தனைபேரையும் வரவேற்று வாழ்வளித்த தேவதையை நாம் மறக்கலாமா?..ஐரோப்பாவிலேயே மிகக்கூடுதலான அகதிகளை வரவேற்று வாழ்வளித்த நாடு என்றால் அது யேர்மனி மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

அஞ்சலா மேக்கல் அம்மையாரைப்பற்றிய சிறுகுறிப்பையும் இச்சந்தர்ப்பத்தில் பார்ப்பது சிறப்பாகும்...

பிறப்பு..17.7.1954 (67 வயது) கம்பேர்க் யேர்மனி

திருமணம்.. 1 Ulrich1977 1982 (விவாகரத்து) 2 ஒணிச்ஞிடடிட் 1998ல் திருமணம். இவர் இரசாயனவியலாளர். பிள்ளைகள் இல்லை.

**கல்வி..பௌதீகவியல் பட்டதாரி,**
**முதுமாணிப்பட்டதாரி**

ஆரம்பத்தொழில்...19%8 1989 பௌதீகவியல் இரசாயனவியல் மத்திய நிலையத்தில் விஞ்ஞான, ஆராய்ச்சி நிறுவனங்களில் பல உயர் பதவிகள்..

1989ல் அரசியலில் இஈக் கட்சியில் இணைந்தார்.

1989 1990 காலப்பகுதியில் மேற்கு கிழக்கு யேர்மனிகள் ஒரு நாடாக மாறப்பாடுபட்ட அன்றைய கான்சிலர் கெல்மட் கோலுடன் அயராது பாடுபட்டு உழைத்தார்.

1990 MecklenburgVorpommem மாநிலத்தின் இஈக் கட்சியின் தலைவரானார்.

1991 1994 யேர்மனி மத்திய அரசில் பெண்கள் இளையோர் விவகார அமைச்சரானார்.

1994 1998 மத்திய அரசின் சுற்றாடல் சூழல், இயற்கைவள பாதுகாப்பு அமைச்சர் பதவி வகித்தார்.

1998 2000 (CDU) யேர்மனியின் பிரதான கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தவைரானார். 2018 வரையும் சுமார் 20 வருடங்கள் கட்சித்தலைவராக இருந்துள்ளார்.

2002 2005 வரை பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்

2005 ஆண்டில் யேர்மனியின் அரசியல் வரலாற்றில் முதல் பெண் கான்சிலராகத் தெரிவு .தொடர்ந்து 2009, 2013, 2017 என நான்கு தடவைகள் கான்சிலர் பதவியில் மொத்தம் 16 வருடங்கள் அரசியல் தலைவராக பயணத்தை நிறைவுசெய்து கொண்டு 2021 செப்டம்பரில் நடைபெறும் தேர்தலில் போட்டியிடாமல் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார்.

இவர் சுமார் 30 வருடங்கள் கடந்து அரசியல் ஈடுபாடுகொண்டவர்.தனது பதவிக்காலத்தில் 5 கண்டங்களிலும் நடைபெற்ற மகாநாடுகள், தலைவர்கள் மகாநாடுகள், ஜி7 நாடுகள் தலைவர்கள் மகாநாடுகள், ஜி20 நாடுகள் தலைவர்கள் மகாநாடுகள், நேட்டோ நாடுகள் மகாநாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டங்கள் என அனைத்திலும் பேருரையாற்றி அனைத்துத் தரப்பினரின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார். உலகின் மதிப்பு மிக்க தலைவர்களில் இவர் விளங்கியிருக்கிறார்.

இவரது விருதுகள் பரிசுகள், பட்டங்கள், கௌரவங்கள் ஏராளம். உலகின் தலைசிறந்த நாடுகளும், தலைசிறந்த பல்கலைக்கழகங்கின்; விருதுகள், பட்டங்கள் , கௌரவங்கள் 50 க்கும் மேல் கிடைத்துள்ளன. கௌரவ டாக்டர் பட்டங்களையும் பல பல்கலைக் கழகங்களும் நிறுவனங்களும் கொடுத்துச் சிறப்பித்திருக்கின்றன.. குறிப்பாக இஸ்ரேல், இந்தியா, பிரித்தானியா, தென் கொரியா, சீனா, சுவீஸ்லாந்து, ரஷ்ஷியா, அமெரிக்கா, இத்தாலி போன்ற நாட்டுத் தலைவர்களால் கௌரவம் பெற்றிருக்கிறார்.

உலகின் தலைசிறந்த பெண்மணிகள் பட்டியலில் 10 இடத்துக்குள் அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறார். ஐரோப்பாவின் சிறந்த பெண்மணி, யேர்மனிய ஊடகவிருது, இந்திராகாந்தி சமாதானவிருது போன்ற அதி உயர் பட்டங்களையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

பட்டங்கள் மட்டுமல்லாது தனது நிர்வாகத் தொழிற்பாடு, ஏனைய உலகத்தலைவர்கள், மற்றும் உயர் நிறுவனங்களின் நன்மதிப்பைப் பெற்ற உலகின் சிறந்த பெண்மணி என்பதை நிரூபித்து, மரியாதையுடன் புகழுடன் தனது பதவிவியிலிருந்து ஓய்வு பெறும் அகதிகளை அரவணைத்த அம்மையாரை நாமும் பாராட்டி மகிழ்வோம். நீண்ட ஆயுள்பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்!...

**வைரமுத்து சிவராசா (யேர்மனி)**








SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# தேர்தலுக்கு ஒரு கட்சி, பிற்பாடு இணைய அரசாங்கம் என்கிற தோடர்ச்சியான சுய நல நடவடிக்கையாலே மாறாத களங்கம்

## முன்னாள் அமைச்சர் பஷீர் சாடுகிறார்

(தர்மேந்திரா)

தேர்தலுக்கு ஒரு கட்சி, தேர்தல் முடிந்த பிற்பாடு இணைய அரசாங்கம் என்கிற தொடர்ந்தேச்சையான சுயநலமான நடவடிக்கை சிங்கள, தமிழ் சமூகங்களுக்கு மத்தியில் மாறாத களங்கத்தை முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்தி உள்ளது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளரும், உற்பத்தி திறன் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

இவரின் ஏறாவூர் இல்லத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம்களின் பெருந்தலைவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவருமான எம். எச். எம். அஷ்ரப்பின் நினைவேந்தல் நினைவுகளை பகிர்ந்து கொண்டபோது பஷீர் சேகு தாவூத் தெரிவித்தவை வருமாறு

பெருந்தலைவர் அஷ்ரப் இன்று உயிருடன் இருந்து இருந்தால் 2000 ஆம் ஆண்டு பின்னர் ஏற்பட்ட புதிய சூழலை அவருடைய தெளிந்த சிந்தனை, தேர்ந்த ஞானம், தீர்க்கதரிசனம், தூர நோக்கு, கூர்மையான புத்தி, ஈமான் ஆகியவற்றின் மூலம் திறம்பட கையாண்டு இருப்பார்.

அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை காப்பாற்றி தந்து இருப்பார், சர்வதேச, இராஜதந்திர உறவுகளையும் வெற்றிகரமாக கையாண்டு இருப்பார். முஸ்லிம் சமூகத்தை சரியாக வழி நடத்தி இருப்பார்.

அவர் மக்களுடன் இருந்தார். மக்கள் அவருடன் இருந்தார்கள். சிங்கள, தமிழ் சமூகங்களுக்கு மத்தியில் நடுநிலை சமூகமாக முஸ்லிம் சமூகம் விளங்க வேண்டும் என்று கனவு கண்டார். சிங்கள, தமிழ் சமூகங்களுடன் முஸ்லிம் சமூகம் உறவாடி ஒன்றாக பயணிக்க வேண்டும் என்று விரும்பினார்.

சிங்கள, தமிழ் மக்களுக்கு மத்தியில் இவ்விதமாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை கொண்டு சென்று உரிய தீர்வுகளை பெற வேண்டும் என்பது அவரின் வியூகமாக இருந்தது. குறைந்த அளவிலான பிரதிநிதிகளே முஸ்லிம் காங்கிரஸுக்கு அவரின் காலத்தில் காணப்பட்டனர்.

ஆனால் குறைந்த அளவு பிரதிநிதிகளை வைத்து கொண்டு இந்நாட்டு முஸ்லிம்கள் அனைவரினதும் நலன்களை கவனித்தார். கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகள் அஷ்ரப்பின் அந்த யுக்தியை இப்போது முன்னெடுப்பதை அவதானிக்க முடிகின்றது.

அதே போல தமிழ் நாட்டை சேர்ந்த சிறிய முஸ்லிம் கட்சிகளும் அதே யுக்தியை கையாண்டு அங்கு உள்ள முஸ்லிம் சமூகத்தை சமத்துவ சமூகமாக மாற்றுவதில் வெற்றி கண்டு வருகின்றன. ஆனால் இங்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சரி, ஏனைய முஸ்லிம் கட்சிகளும் சரி அவரின் யுக்தியை முன்னெடுக்க தவறி விட்டன.20 இற்கு ஆதரவாக கை உயர்த்த எந்த நன்மையை சமூகத்துக்கு பெற்று கொடுத்தனர் என்றால் ஒன்றுமே இல்லை.

பெருந்தலைவர் அஷ்ரப்பின் காலத்துக்கு பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி பிழையாக வழி நடத்துகின்றது. தேர்தலுக்கு ஒரு கட்சி, தேர்தல் முடிய இணைய அரசாங்கம் என்கிற சுயநலமான நடவடிக்கையை தொடர்ந்தேச்சையாக முன்னெடுத்து வருகிறது.

இதனால் சிங்கள, தமிழ் சமூகங்களுக்கு மத்தியில் மாறாத களங்கம்



முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட உள்ளது. இது முஸ்லிம் சமூகத்துக்கு பிரச்சினையாக மாறி உள்ளது. முஸ்லிம் சமூகத்தை சரியாக வழி நடத்த கூடிய தலைமை கிடையாது. அஷ்ரப் என்ற பெயரைகூட குறுகிய சுய இலாப அரசியலுக்கே பயன்படுத்துகின்றனர்.

சொந்த வீட்டுக்கு உறுதி வைத்திருப்பது போல கட்சியின் யாப்பை மாற்றி வைத்து உள்ளனர். அடுத்த கட்ட தலைமைகள் அங்கு இல்லை. உண்மையான போராளிகளை கழுத்தறுப்பு செய்து வெளியேற்றி விட்டார்கள். கழுத்தறுப்பு செய்வதற்கு தலைவரால் பயன்படுத்தப்பட்ட அந்த நபர்களே இன்று தலைவரின் கழுத்தை அறுத்து கொண்டு இருக்கின்றார்கள்.

# குழாய் நீர் தடை

(கதிரவன்)

திருகோணமலையில் எதிர்வரும் 22 ம் திகதி புதன்கிழமை நீர் விநியோகம் தடைப்படும் என தேசிய நீர்வழங்கல் வடிகான் அமைப்பு சபை திருகோணமலை பிராந்திய அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான நீர் வழங்கல் குழாயில் ஏற்பட்டுள்ள திருத்த வேலைகாரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை கந்தளாய் கிண்ணியா தம்பலகாமம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் இத்தடை ஏற்பட உள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாவனையாளர் சேவை இடம்பெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடிநீருக்காய் ஏங்கும் மக்கள்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி01 வள்ளுவர் வீதியில் வசித்து வரும் குடும்பங்களுக்கு குடி நீர் இன்றி வாழ்வதாக கவலை தெரிவிக்கின்றனர். சுமார் 30 குடும்பங்களுக்கான குடி நீர் இன்றி கிணற்று நீரினை குடிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். 1996 களில் இருந்து தற்போது வரை குடி நீர் இன்மையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அப் பகுதியில் உள்ள கிணற்று நீரினை அருந்துவதால் சிறு நீரக நோய்,வாந்தி பேதி உள்ளிட்ட தொற்றா நோய் ஏற்படுவதாகவும் சிறு பிள்ளைகளுக்கும் இதனால் தாக்கத்தை உண்டுபண்ணுவதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இப் பகுதியில் பிரதான குழாயினை பொறுத்தி தருவார்களேயானால் தாங்கள் சொந்த பணத்தில் குடி நீர் இணைப்பினை பெறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பல வருட காலம் சுத்தமான குடி நீர் இன்றி அல்லல் படுவதாகவும் இதனால் குடிப்பதற்கும் ஏனைய தேவைகளை நிறைவேற்றவும் குடி நீன் இன்மையால் பல அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் அம் மக்கள் மேலும் கவலை வெளியிடுகின்றனர்.

எனவே தங்கள் பகுதிக்கான குடி நீரினை பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# முஸ்லிம்களுக்கும் நீதியை பெற்றுக் கோடுக்க முன்வர வேண்டும்



## நகரசபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த வித யுத்தக் குற்றங்களிலும் ஈடுபட வில்லை என ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் தலைமைத்துவம் இன்றி தடுமாறும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்காகவும் இழப்புகளுக்காகவும் குரலெழுப்ப வேண்டுமென கிண்ணியா நகர சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமான எம்.எம்.மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

அதே யுத்தக் காலங்களில் வடக்கு ,கிழக்கு வாழ் முஸ்லிம்களும் பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் முகம் கொடுத்து வந்தார்கள்.

1) வடக்கு வாழ் முஸ்லீம்கள் அனைவரும் உடமைகள், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு வலு கட்டாயமாக ஆயுததாரிகளால் வெளியேற்றப்பட்டனர்.

2. காத்தான்குடி பள்ளிவாயலில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது முஸ்லிம்கள் அனைவரும் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

3.மக்கா சென்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றி வீடு திரும்பிய ஹஜ்ஜாஜிகள் வழி மறிக்கப்பட்டு ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

4. பொலன்நறுவையை அண்டிய முஸ்லிம் குடியேற்றங்களுக்குள் புகுந்த ஆயுததாரிகளால் பொதுமக்களும் கர்ப்பிணிகளும் கொல்லப்பட்டதோடு வயிற்றில் இருந்த குழந்தைகளும் வெளியே எடுக்கப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

5. மூதூரில் இருந்து முஸ்லிம்கள் கட்டாயத்தின் அடிப்படையில் ஆயுததாரிகளால் வெளியேற்றப்பட்டனர்.

6. ஆயுததாரிகளால் முஸ்லிம்கள் கடத்தப்பட்டு கப்பங்கள் பெறப்பட்டதோடு சுட்டுக் கொல்லவும் பட்டார்கள். %.முஸ்லீம்களின் பொருளாதாரம், வியாபார நிலையங்கள், சொத்துக்கள் என்பன பாரியளவில் ஆயுததாரிகளால் கொள்ளையிடப்பட்டதோடு தீக்கிரையாக்கவும் பட்டன.

இவ்வாறு பல்வேறு அநியாயங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உட்பட்ட முஸ்லிம் சமூகமானது தலைமைத்துவம் இன்றி தள்ளாடிக் கொண்டிருக்கின்ற இவ்வாறான நேரத்தில் முஸ்லிம்களுக்காகவும் கௌரவ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் அவர்களின் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க குரலெழுப்ப வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கோறளைப்பற்று மத்தி பிரிவில் தடுப்பூசி ஏற்றும் பணிகள்


(ந.குகதர்சன்)

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துக் காணப்படும் நிலையில் அரசாங்கத்தினால் தடுப்பூசிகளை ஏற்றும் பணிகள் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள போதும் இடம் பெற்று வருகின்றது.

அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட சுகாதார பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.மயூரன் தலைமையில் பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாம் மற்றும் இரண்டாவது தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது

அந்தவகையில் கோறளைப் பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இன்று வாழைச்சேனை மீன்பிடி துடிறுமுகம், பிரதேச பாடசாலைகள் உட்பட மூன்று மத்திய நிலையங்களில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் கோறளைப் பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரி.நஜீப்கான் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த தடுப்பு ஊசி ஏற்றும் பணியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கொரோனா நோய் அபாயம் மற்றும் தடுப்பூசி ஏற்றுவது அவசியம் தொடர்பில் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு தெளிவூட்டல் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

# மூதூர் பிரதேசத்திற்கு இராஜங்க அமைச்சர் மோஹான் பிரியதர்சன டி சில்வா விஜயம்

(இஃஜாஸ் ஏ பரீட்)

தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் மரக்கன்றுகளை நாட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக பசளை உற்பத்தி, விநியோகம், இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினிகள் பாசனை ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டீ சில்வா மூதூர் பிரதேசத்திற்கு விஜயமொன்றினை மேற்கொண்டார்.

இராஜங்க அமைச்சருடன் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். தௌபீக் கலந்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சர் மூதூர் தக்வா நகர், ஹபீப் நகர்,



ஹைறியா நகர் போன்ற பிரதேசங்களை கடலரிப்பில் இருந்து தடுப்பதற்காக ஆகிய பகுதிகளில் கண்டல் தாவரங்களை நட்டு வைத்தார்.

மற்றும் நடுத்தீவில் கண்டல் தாவர நடுகையையும் ஆரம்பித்துவிட்டு தக்வா நகர் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தையும் பார்வையிட்டார்.

கடந்த வருடங்களில் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நடைபெற்ற வேலைகளை பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர்மேலும் மிகுதியாக இருக்கின்ற வேலைகளை முன்னெடுப்பதற்கு 2022ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக இராஜங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா இதன் போது உறுதியளித்துள்ளார்.இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சின் செயலாளர், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், ஏனைய உத்தியோகத்தர்கள் எ பலர் கலந்து கொண்டனர்

# அமெரிக்க தயாரிப்பு துப்பாக்கியுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எத்தாபெந்திவெவ பகுதியில் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட சொட்கன் என்றழைக்கப்படும் துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகநபரொருவரை நேற்று முன்தினமிரவு (16) கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

வீட்டின் அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலால் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைவாக சென்ற குழுவினர் அவரது வீட்டை சோதனையிட்ட போது சொட்கன் துப்பாக்கியை மீட்டதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ரொட்டவெவ-எத்தாபெந்திவெவ பகுதியைச் சேர்ந்த 29 வயது உடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.





# கொவிட்டுக்கு மத்தியிலும் பாரிய அபிவிருத்தி!

கொவிட்டுக்கு மத்தியிலும் நாட்டில் அபிவிருத்திப்பணிகள் பரவலாக இடம்பெற்றுவருகின்றன.

மாத்தளை மாநகர எல்லைக்குட்பட்ட களுதாவளை ஆற்றங்கரை வீதி பாதை காப்பட் செப்பனிடும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வீதியமைப்புப்பணியின் அங்குரார்ப்பண நிகழ்வு சுகாதாரமுறைப்படி சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.மாத்தளை மாநகரசபை மேயர் சந்தனம் பிரகாஷ் இவ்வீதியமைப்புப்பணியின் அங்குரார்ப்பணநிகழ்வில் பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டார். மாநகரசபையின் ஒன்றரைகோடி ருபா செலவிலான களுதாவளை வரலாற்றில் முதல்தடவையாக ஒரு கார்ப்பட் வீதியாகக்கருதப்படும் இப்பணி சமயஆசாரங்களுடன் விசேட பூஜையுடன் ஆரம்பமாகியது.

கொவிட் தாக்கத்திற்கு மத்தியிலும் இத்தகைய அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவது குறித்து சமுகஆர்வலர்கள் மேயர் பிரகாஷிற்கு பாராட்டுத்தெரிவித்துவருகின்றனர்.

கொடிய கொரோனா தாக்கம் மற்றும் தடுப்பூசி வழங்கலுக்கு மத்தியில் மாத்தளை மாநகரசபை மேயர் சந்தனம் பிரகாஷ் நகரிலுள்ள பாதைகளை செப்பனிடும்பணியை நேரடியாகச்சென்று பார்வையிட்டு சீராக பாதயைமைக்க வழிசமைக்கும் அதேவேளை தொழினுட்பக்குழுவினருடன் கலந்துரையாடியும் வருகின்றார்.

### கொவிட்டுக்கான விசேட சேவைகள்

இலங்கையில் மாநகரசபையொன்று கொரோனாத்தடுப்புச் சேவைகளை சிறப்பாக முன்னெடுத்துவருகின்றதென்றால் அது மாத்தளை மாநகர சபையாகத்தானிருக்கும் . அப்படி இன்னோரன்ன மக்கள் சேவைகளை அச்சபை முன்னெடுத்துவருவதாக அறியக்கிடைத்தது.

அதுதொடர்பாக மாநகரமுதல்வர் சந்தனம் பிரகாஷ் விபரிக்கையில்:

எமது சபையால் கொரோனாவுக்கென பல வேலைத்திட்டங்களை செய்துவருகிறோம். கூடுதலான நிதியை கொரோனாச்சேவைக்கு ஒதுக்கி பயன்படுத்திவருகிறோம்.உறுப்பினர்களும் ஏகோபித்தமுறையில் தமது பூரண ஆதரவை நல்கிவருவதும் இவ்வெற்றிக்கு காரணமாகும்.

மக்களைப்பாதுகாக்கின்ற சேவையை நாம் எமது சுகாதாரப்பிரிவினரைக்கொண்டு முதன்மைச்செயற்பாடாக இரவுபகலாகச் செய்துவருகின்றோம். முதலாவதாக அம்புலன்ஸ் சேவை பற்றிக்கூறுகிறேன்.

மாத்தளை மாநகர எல்லைக்குள் கொவிட் 19 தொற்றுக்குள்ளான தொற்றாளர்களை அவசர நிலைமைகளின்போது சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்து செல்வதற்கு வாகன வசதியின்மையால் அசௌகரியத்துக்கு உள்ளாகிவந்தனர்.



இதற்கு தீர்வுகாணுமுகமாக எமது சபையினால் இவ்விலவச வாகனசேவையை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கென ஆளணியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக உதவி கரம் நீட்டுவதற்காக 24 மணித்தியால இலவச வாகன சேவை கடந்த 24ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவசர தேவைக்கு 0710227227 க்கு தொடர்பு கொள்ளலாம். இச்சேவையையிட்டு மக்கள் மிகுந்த பாராட்டைத் தெரிவித்துவருகின்றனர்.

தற்காலத்தில் கொவிட் தொற்றுக்குள்ளாகினால் உறவுகள் ஏனையோர் ஒதுக்கிவருவதைக்காணக் கூடியதாயிருந்தது. அவரவர் பாதுகாப்பே அதற்கு காரணம். தொற்றின் வேகம் நோயின் அகோரம் என்பனவே அதற்கு காணரங்கள்.



நோய்வாய்ப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்குகொண்டுபோக வாகன உரிமையாளர்கள் தவிர்த்துவந்தார்கள். ஆதலால்தான் தனியான சேவையை செய்ய முன்வந்தோம். கைகொடுத்து உதவவேண்டும்.இது சுகாதாரத்துறையின் கடமையல்லவா? எவ்வாறு அது சாத்தியமானது? என நீங்கள் கேட்கலாம். உண்மை. எமது சபையிலும் சுகாதாரப்பரிவு உள்ளது. அவர்களின் துணையோடுதான் இம்மக்கள்சேவையை செய்துவருகின்றோம். பொசிட்டிவ் கருத்ப்பட்டவர்களை எமது அம்புலன்சிஸ் பிஎச்ஜ சகிதம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்வது மட்டுமல்ல அவரோடிருந்த ஏனைய குடும்ப உறுப்பினர்களை தனிமைப்படுத்தி அவர்களுக்குத் தேவையான மருந்துகளை எமது சபையிலுள்ள மற்றொரு குழுவினர் வழங்குவார்கள்.

கொவிட் நபர் சார்ந்த குடும்பங்களுக்கான சேவைகள் இன்னும் பல மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் உலருணவுப்பொதிகளுக்கு மேலதிகமாக சபைமூலமும் வழங்கிவருகின்றோம். எமது சபைமூலமாக தொகுதி தொகுதியாக பிரித்து அவர்கள்மூலம் இப்பொருட்களை வழங்கிவருகிறோம்.

14நாட்காலத்தில் எம்மைவிட்டால் வேறு யாருமில்லை என்ற மனப்பாங்கில் நாம் அர்ப்பணிப்பான மக்கள்சேவையை முன்னெடுத்துவருகின்றோம். சிலவேளை யாரும் இருக்கலாம் ஆனால் அவர்கள் இன்றைய தொற்றுக்காலத்தில் உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். எனவேதான மக்கள்சேவைக்கென வந்த நாங்கள் அப்பணியை இந்த இக்கட்டான காலகட்டத்தில் வழங்கிவருகின்றோம். மேலும் ஏனைய இடங்களில் சுகாதாரத்திணைக்களம் முன்னெடுத்திருக்கின்ற வக்சீன் அதாவது தடுப்பூசி வழங்கும் திட்டத்தை மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தையும் பலரும் மெச்சத்தக்கவகையில் சிறப்பாக முன்னெடுத்துவருகிறோம். அதற்கு எமது வைத்தியஅதிகாரி டாக்டர் அனுசா வெலகெதர உள்ளிட்ட சுகாதாரக்குழுவினர் பரிபூரணமாக ஒத்துழைத்து வருகின்றனர்.மாநகரசபையில் 45ஆயிரமளவில் வாக்காளர்கள். மக்கள்சனத்தொகை 90ஆயிரம்பேரளவில் வாழ்ந்துவருகின்றனர்.

கொரோனாவால் மரணித்தவர்களின் உடலங்களை பொறுப்பெடுத்து தகனக்கிரியைகளை இலவசமாகச்செய்துவருகிறோம்.

சபையில் ஒரு பிரேரணையைக்கொண்டுவந்து கொரோனாவால் இறக்கின்றவர்களின் உடலங்களை நாமே பொறுப்பெடுத்து இலவசமாக தகனக்கிரியை செய்துவருகின்றோம். இதுவரை சுமார் 150பேர் அளவில் உடல்ங்கள் தகனக்கிரியையை செய்துள்ளோம். ஒருவர் கொரோனாவால் மரணித்தால் அவருக்கு சுமார் 10ஆயிரம் ருபா முதல் 15ஆயிரம் ருபாவரை எமது சபைக்கு செலவாகின்றது.இருந்தும் மக்களுக்கான உயரிய அந்திமகால சேவையாக இதனைக்கருதுகிறோம்.

கொரோனாவால் மக்களின் வாழ்வாதாரம் வருமானம் பாதிக்கப்பட்டிருப்பதால் வசதி இல்லாமலுள்ளது. அதையுணர்ந்தே இதிலும் எமது நிவாரணத்தை வழங்கவேண்டும் என்ற மனிதாபிமான நோக்கொடு நாம் இவ் இலவச தகனக்கிரியை ஏற்பாட்டை செய்துவருகின்றோம்.உண்மையில் இது எமது மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கு மாத்திரமே என்று ஆரம்பிக்கப்பட்டது. எனினும் எமது எல்லைக்குள் உள்ள மாத்தளை ஆதாரவைத்தியசாலையில் கொரோனாவால் மரணிக்கும் அனைவரது உடலங்களையும் அவர் எந்த ஊராக எந்த பிரதேசத்தவராக இருந்தாலும் எந்த இனத்தவராக நாமே முன்னின்று பொறுப்பேற்று அதனை முறைப்படி தகனம்செய்துவருகின்றோம்.

எமது சபையின் அதிகாரவரம்பிற்குட்பட்டவகையில் எமது மாநகரஎல்லைக்குட்பட்ட மக்களுக்கு சேவைசெய்வதே எமது பிரதான இலக்கு. இருந்தபோதிலும் கொரோனாவால் மாத்தளை ஆதாரவைத்தியசாலையில் இறக்கும் மக்களது உடலங்களை சட்டத்திற்குஅப்பால் ஆனால் அதற்குரிய ஆளுநரின் உத்தியோகபூர்வமாக விசேட அனுமதியுடன் செயற்படுத்திவருகின்றோம்.



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)



# ஓட்டமாவடியில் மனித உயிர்களைக் காவு கோள்ளும் தண்டவாளம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

நாம் என்னதான் பாதுகாப்பாக பயணம் செய்தாலும் விபத்துக்கள் எம்மை எதிர் நோக்கியே வருகின்றன.

இறைவனின் நாட்டம் ஒருபுறமிருக்க நாம் பயணம் செய்யும் போது நம்மில் ஏற்படும் பொடுபோக்கும், அசமந்தப் போக்குமே நாம் விபத்தில் சிக்கிக் கொள்ளவும், பிறரை விபத்துக்குள்ளாக்கவும் காரணமாக அமைகின்றது.

ஒரு ஊரை விட்டு வேறு ஊருக்கு நாம் பிரயாணம் செய்யும் போது மிகக் கவனமாகவும், நிதானமாகவும் பயணம் செய்ய வேண்டும். அந்த ஊரின் வீதிகளின் அமைப்புகள், வளைவுகள், பள்ளம் படுகுழிகள், விபத்துக்கள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றை நாம் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறு அறியாமல் நாம் பயணிக்கும் போது தான் விபத்துக்களை எதிர்கொண்டு பல்வேறு ஆபத்துக்களை நம்மில் பலரும் சந்திக்கின்றனர்.

வீதிகள் பயணிக்க அழகாக இருக்கிறது என்பதற்காக நாம் ஒருபோதும் கண்ணைக் கட்டிக் கொண்டு பயணிக்க முடியாது. விபத்து என்பது நேரான பாதையிலும் வரும் கரடுமுரடான பாதையிலும் வரும் எனவே, நாம் எந்த இடத்தில் பயணிக்கிறோமோ அந்தந்த இடங்களில் மிகவும் அவதானமாக பயணிக்க வேண்டும்.

சில ஊர்களில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறும் சந்திகளையும், வீதிகளையும் நாம் அவ்வப்போது கேள்விப்பட்டு வருகிறோம். அவ்வாறான இடங்களில் ஒன்றாகத்தான் ஓட்டமாவடி பாலத்தினால் குறுக்கறுக்கும் தண்டவாளம் காணப்படுகிறது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை மற்றும் வாழைச்சேனை புகையிரத நிலைய நிர்வாக எல்லைக்குட்பட்ட இவ் இடத்தில் விபத்துக்கள் இடம்பெறாத நாட்களே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த இடத்தில் நாளாந்தம் விபத்துக்கள் நடைபெறுகின்றன.

ஓட்டமாவடியில் இரண்டு பாலங்கள் காணப்படுகின்றன. ஒரு பாலம் புகையிரத வண்டி மாத்திரம் செல்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. அதேபோன்று புதிய பாலத்தினால் பாதசாரிகள், வாகனங்கள், கால்நடைகள் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

புதிய பாலத்தால் செல்லும் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் நபர்களே கூடுதலாக விபத்துக்குள்ளாகின்றனர்.

குறித்த இடத்தில் காபட் வீதி வளைந்து செல்லும் பகுதியாக காணப்படுகிறது. அதில் தண்டவாளம் காபட் வீதியில் இருந்து சற்று உயரமாக காணப்படுவதால் அதில் பயணிக்கும் வாகனங்கள் சறுக்கி விபத்துக்குள்ளாகின்றன.

தண்டவாளத்தை குறுக்கறுக்கும் காபட் வீதி திட்டமிடலுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டால் குறித்த இடத்தில் தொடர்ந்தும் இடம்பெறும் விபத்துக்களை தடுக்க முடியும் என்று பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தூர இடங்களில் இருந்து வரும் நபர்கள் இந்த இடத்தின் தன்மைகள் தெரியாமல் மிக வேகமாகப் பயணித்து விபத்துக்களில் சிக்கிக் கொண்ட சம்பவங்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஏராளமாக பதிவாகியுள்ளன.



அத்துடன் அந்த இடத்தில் ஏனைய காலங்களை விட மழை காலங்களில் கூடுதலாக விபத்துக்கள் நடைபெறும் இடமாகவும் மாறியுள்ளது. வரும் மாதங்களில் மழை பெய்யக் கூடிய காலநிலை உள்ளதால் அதிலும் விபத்துக்கள் நடக்கம் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளது. இதனால் பெறுமதியான உயிரிழப்புகள் இடம்பெறுவதுடன், கை, கால்கள் உடைந்த நிலையில் தங்களது வாழ்வை அமைத்துக் கொள்ளும் நிலையிலும் பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியை கடந்துதான் வாழைச்சேனை கடதாசி ஆலை, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், காவத்தமுனை வைத்தியசாலை மற்றும் வயல் நிலங்கள், அரிசி ஆலைகள், பாடசாலைகள் உட்பட ஏராளமான தொழில் நிலையங்களுக்கு செல்லும் ஒரே வீதியாக இது காணப்படுகிறது.

இதனால், பயணிக்கும்போது தங்களின் உயிர்களை கையில் பிடித்துக்கொண்டு தினந்தோறும் அச்ச உணர்வில் பயணிப்பதாக பயணிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஏழை குடும்பத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் அந்த தண்டவாளத்தில் சறுக்கி விழுந்து கணவன் தெய்வீகமாக உயிர் தப்பியதுடன் மனைவி மீது டிப்பர் வாகனம் ஏறியதில் அவர் சம்பவ இடத்தில் மரணமடைந்த சோக நிகழ்வும் நடைபெற்றது.

அதே போன்று சில மாதங்களுக்கு முன்னர் மழை பெய்து கொண்டிருந்த போது இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்ற போது அந்த தண்டவாளத்தில் சறுக்கி விழுந்ததில் ஒருவர் மரணமடைந்ததுடன் மற்றவர் ஆபத்தான நிலையில் மிக நீண்ட நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளார்.

இதே போன்று அந்த இடத்தில் ஏராளாமான விபத்துச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறு அந்த இடத்தில் நடந்த விபத்துச் சம்பவங்களை பட்டியல் இட்டே செல்லலாம்.

அந்த இடத்தால் சுமார் நாப்பது வருடங்களாக பயணிக்கும் நபர் ஒருவர் மிகவும் மன உளைச்சலுடன் அந்த இடத்தால் பயணிப்பதாக எம்மிடம் கவலையுடன் கூறினார்.

நான் செல்லும் போது ஏராளாமான விபத்துக்களை பார்த்துள்ளேன். அதில் பல உயிர்கள் அந்த இடத்தில் துடிக்கத் துடிக்க சென்றுள்ளதை நான் கண்டுள்ளேன். இதனால் நான் இன்றும் கூட மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன்.

ஓட்டமாவடியில் விபத்து என்று நான் கேள்விப்பட்டால் எனக்கு அந்த தண்டவாளப் பகுதி மாத்திரம் தான் நினைவில் வருவதுண்டு. அந்த இடத்தை கடக்கும் போது நான் உட்பட யாரும் விபத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்ற பிரார்த்தனையோடுதான் நான் தினந்தோறும் அதைக் கடந்து செல்வதுண்டு என்று அந்நபர் எம்மிடம் கவலையுடன் தெரிவித்தார்.

அந்நபர் போன்று ஏராளமான நபர்கள் அந்த இடத்தில் தாம் கண்டு கொண்ட விபத்துச் சம்பவங்களை எம்மிடம் பகிர்ந்து கொண்டனர்.

தாம் கடமைக்கு வரும் போது எங்களது கடமைகளில் ஒன்று போல அவ்விடத்தில் சறுக்கி விழும் நபர்களை தூக்கி விடும் ஒரு வேலையையும் நாம் பார்த்து வருகிறோம் என்று அவ்விடத்தில் அமைந்துள்ள புகையிரத கடவை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மனித உயிர்களை காவுகொள்ளும் அந்த இடத்தை புனர்நிர்மாணம் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன் இரவு நேரங்களில் இருளில் சூழ்ந்துள்ள அந்த இடத்திற்கு மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்று அவ் வீதியை பயன்படுத்தும் நபர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேபோன்று குறித்த இடத்தினால் பயணிகள் அவதானமாக பயணிக்க வேண்டும் என்று காட்சிப் பலகை ஒன்றை அமைக்க வேண்டும் என்று பலரும் தெரிவிக்கின்றனர்.

அவ் வீதியை நாளாந்தம் பயன்படுத்தும் நபர்களும் தூர இடங்களில் இருந்து அவ் வீதியால் பயணிக்கும் நபர்களும் மிகுந்த அவதானத்துடன் பயணித்தால் பாரிய விபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டு தமது பெறுமதியான உயிர்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி பொது மக்கள் எவ்வித ஆபத்துக்களுமின்றி குறித்த வீதியால் பயணம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com



SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் மணல் விற்பனை செய்தால் முறையீடு செய்யவும்

**வாஸ் கூஞ்ஞ**

மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்ட செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட எவராவது அதிக விலைக்கு மணல் விற்பனை செய்தால் அதுவிடயமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கோ அல்லது பிரதேச செயலாளர்களுக்கோ முறையீடு செய்தால் அவர்களின் அனுமதி பத்திரங்கள் ரத்து செய்யப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலத்தில் எழுந்தமானமாக மணல் அகழ்வு செய்யப்பட்டதுடன் மணலுக்கான விலைகளும் அதிகமாக காணப்பட்டதால் இதுவிடயமாக மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற மாவட்ட சட்ட அமுலாக்கல் குழு கூட்டத்தில் இவ் மணல் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல்.



அதாவது மன்னார் மாவட்டத்தில் புவிச்சரியியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் மணல் அகழ்வு அனுமதி பெற்றவர்களின் விபரங்கள் பெறப்பட்டிருந்தது.

இவ் விபரத்தினை அப்பகுதிகளிலுள்ள கிராம அலுவலகர்களுக்கு வழங்குவதனூடாக மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் பொதுமக்களின் கட்டுமானத்துக்கு தேவையான மணல் விநியோகத்தை தடையின்றி நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் தலைமன்னார் பகுதியில் ஒரு ரிப்பர் மணல் 34 ஆயிரம் ரூபாவுக்கும், மன்னார் நகரத்தில் 30 ஆயிரம் ரூபாவுக்கும், நானாட்டான் பகுதியில் 32 அயிரம் ரூபாவுக்கும், மாந்தை மேற்கு மற்றும் மடு பகுதிகளில் தலா 29 ஆயிரம் ரூபாவுக்கும். விற்பனை செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதுடன் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட கூடுதலான விலைகளுக்கு இவ் மணல் விற்பனை செய்யப்படுவதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அரசு அதிபர் தெரிவிக்கையில் குறிப்பிடப்பட்ட விலைகளுக்கு மேல் எவராவது மணல் விற்பனை செய்தால் முறையீடு செய்யும் பட்சத்தில் மணல் விற்பனை செய்வோரின் அனுமதி பத்திரங்கள் நிறுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

# ஆயித்தியமலையில் 57 சிறிய சாராயப் போத்தல்களுடன் பெண் கைது

**(வவுணதீவு நிருபர்)**

மட்டக்களப்பு, ஆயித்தியமலை பொலிஸ்பிரிவில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட பொண் ஒருவரையும் மதுபானப் போத்தல்களையும் வெள்ளிக்கிழமை (17) ஆயித்தியமலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆயித்தியமலை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக, உப பொலிஸ் பரிசோதகர் கருணாதிலக, பொலிஸ் உத்தியோகத்தர்களான, வண்டார (50639), குணதாச (56395 ), நெவில்(164%9), திசநாயக்க (18608) ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழவினரே இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.



ஆயித்தியமலை 9ம் கொளனி எனும் இடத்தில், பெண் ஒருவர் தனது வீட்டில் கால்போத்தல் அளவு கொண்ட 5% போத்தல்களை தன் வசம் வைத்திருந்து விற்பனையில் ஈடுபட்டதன்பேரில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சாராயப் போததல்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் கருணாதிலக தெரிவித்தார்.

கைது செய்யப்பட பெண்ணையும் சாராயப் போத்தல்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரபல ஐஸ் போதைப்பொருள் வியாபாரி ஓட்டமாவடியில் கைது



**(ந.குகதர்சன்)**

பிரபல ஐஸ் போதைப்பொருள் வியாபாரியொருவர் ஹிஜ்ரா வித்தியாலய வீதி, ஓட்டமாவடி3 எனும் முகவரியிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை 01.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். 48 வயதுடைய இவரிடமிருந்து சுமார் 30 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இவருடன் தொடர்புபட்ட நபர்கள் தொடர்பிலான தகவல்கள் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அத்துடன், குறித்த பிரதேசத்தில் போதை வியாபாரத்தில் ஈடுபடுவோர், போதை பாவிப்போர் தொடர்பில் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைக் கைது செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா அச்சுறுத்தல், பொது முடக்கம் அமுலிலுள்ள நிலையிலும் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வு பிரிவினரும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரும் மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கை காரணமாக இவ்வாறான போதை வியாரிகள் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கோரோனா நோய் எதிர்ப்பு பானம்: ஆயுர்வேத வைத்தியசாலையினால் வழங்கி வைப்பு

**(பாறுக் ஷிஹான்)**

கொரோனா வைரஸ் தொற்று நோய் எதிர்ப்பு சக்தி பானம் (Joshand pac-k) பொது மக்களுக்கு இலவசமாக வழங்கி வைக்கும் நடவடிக்கை கல்முனை பிரதேசத்தில் நேற்று (17) முன்னெடுக்கப்பட்டது.

ஜானாதிபதி கோட் டாப ய ராஜபக்சவின் எண்ணக்கருவில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜஹம்பத்தின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சாரின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி. இ.ஸ்ரீதர் அவர்களின் ஆலோசனைக்கும், அறிவுருத்தல்களுக்கும் அமைவாக, கல்முனைப் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.ஏ.நபீலின் மேற் பார்வையில் கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.வை.இஸ்ஹாக் தலைமையில் கல்முனை மனித வள அமைப்பின் ஒத்துழைப்பில் இடம்பெற்றது.

கல்முனை கீரின் பீல்ட் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று கொவிட் 19 வைரசுக்கெதிரான நோய் எதிர்ப்பு சக்தி பானம் (Joshand pack) பொது மக்களுக்கு வழங்கி வைக்கப் பட்டது.

மேலும் இதன்போது, கொவிட் 19 நோய் தொடர்பில் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் விழிப்புணர்வு மேற்கோள்ளப்பட்டு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரஃப் அவர்களின் 21 வது நினைவு தினத்தில் அல் குர்ஆன் பிரதிகளும் கையளிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரஃப் அவர்களின் 21 வது நினைவு தினத்தில் துஆ பிராத்தனை இடம்பெற்றதுடன் அல் குர்ஆன் பிரதிகளும் கையளிப்பு செய்யப்பட்டது.

மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரஃப் மறைந்து இன்றுடன் 21 ஆண்டுகள் கழித்த நிலையில் அவருடைய நினைவாக வியாழக்கிழமை(16) மருதமுனையில் துஆ பிராத்தனையுடன் அல் குர்ஆன் பிரதிகளும் கையளிப்பு செய்யப்பட்டது.



இன் நிகழ்வினை மருதமுனை BAITHUL HELP ORGANIZATION FOR RELIEF சமூக சேவை நிறுவனம் ஏற்ப்பாடு செய்திருந்தது.





# ஜேர்மனியில் பிறந்து வளர்ந்த இளையோரின் புதியசாதனை!..

அடுத்த தலை முறையினரால் கூட்டமைத்து தமிழ் கலைக்கு பெருமை சேர்த்த சிறப்பு அரங்கேற்றம் யேர்மனியில் புதிய தொரு அத்தியாயத்தைப் படைத்துள்ளது.ஜேர்மனியில் கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக இயங்கிவரும் கிறீபீல்ட் நகர ''ஆடற்கலாலயம்'' நடனப்பள்ளி ஆசிரியை ரெஜினி சத்தியகுமாரின் மாணவன் நடன ஆசிரியர் செல்வன் நிமலன் சத்தியகுமார் அவர்களின் நட்டுவாங்கத்தில் அரங்கேற்றிய அரங்கேற்ற நிகழ்வு கடந்த 04.09.2021 சனிக்கிழமை மாலை ஜேர்மனிடியூஸ்பேர்க் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நடனஆசிரியரும் தாயாருமான திருமதி ரெஜினி சத்தியகுமாரின் வழிகாட்டலில் அன்னையிடம் நடனம் பயின்று அரங்கேற்றம் கண்டவர்தான் இங்கு பிறந்து வளர்ந்த செல்வன் நிமலன.; இன்று நடன ஆசிரியராக உயர்ந்து வளர்ந்து பயின்ற தனயன் அன்னையின் முன் இரு மாணவிகளையும் ஒரே மேடையில் அரங்கேற்றத்திற்கு நட்டுவாங்கம் செய்து சிறப்பாக நடத்தி முடித்திருப்பது வரலாற்றில் ஒரு திருப்பு முகமாக அமைந்திருக்கிறது.

அதாவது புலம் பெயர் நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழுடன் நடனக்கலையையும் கற்று இன்று நடன ஆசிரியராக பரிணமித்திருப்பது, அடுத்த தலைமுறையினர் நமது பாரம்பரியக் கலைகளில் ஒன்றான பரத நாட்டியத்தை எடுத்துச் சென்றிருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும். புலம் பெயர்ந்து வாழும் அடுத்த தலைமுறைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்தது. இது ஒரு புதிய சாதனையாகப் பதிவுபெறுகின்றது.

இந்தக் கொவிட் 19 காலத்திலும் சிரமம் பார்க்காது தனது மாணவிகளைப் பயிற்றுவித்து மேடையேற்றியது. பாராட்டப் படவேண்டிய விடையமாகும். சகோதரிகளான செல்விகள் ரோசிகா, ராசிகா ரவிக்குமார் இருவரின் அரங்கேற்றம் ஒரே மேடையில் நடைபெற்றது. அரங்கேற்றத்திற்கு அதிக சிரத்தையுடன், சிரமம் பாராத உழைப்பாகும். அரங்கேற்ற நாயகிகளின் உருப்படிகளில் நன்கு மிளிர்ந்தது.அவையும் அதிர்ந்தது. அலங்கார மேடை, பல வர்ணமின்னொளி, நாட்டியத்தாரகைகளின் பல வர்ண ஆடை அணிகலன்கள் அனைத்துமே இந்த அரங்கேற்ற நிகழ்வுக்கு மெருகூட்டின.

ஆரம்பத்தில் நாதஸ்வரத்துடன் மங்கலமாக மாணவிகள்,குரு விருந்தினர் சகிதம் உள்ளே வந்து, மேடையில் ஏறினார்கள். இறையருள் வேண்டி பூஜை செய்தார்கள். அரங்கேற்ற நாயகிகள் ரோசிகா,ராசிகா,ரவிக்குமார் சகோதரிகளுக்கு ஆசானின் ஆசீர்வாதத்துடன் சலங்கை அணிவித்தார்.அடுத்து நிமலன் சத்தியகுமார் ஆசான் ராசிகாவிற்கு சலங்கை அணிவித்தார்.அதில் சிறப்பு, ஆசான் தனது மாணவியின் காலுக்கு தனது மடியில் வைத்து கட்டியது. எல்லோரும் செய்யலாம் ஆனால் இளையோன் இங்கு பிறந்து வளர்ந்தவர் இப்படி செய்தது ஆச்சரியமாக இருந்தது.பாராட்டுக்கள்.

புஸ்பாஞ்சலியுடன் விநாயகர் துதியுடன் இறை ஆசியுடன் ஆரம்பமானது.அடுத்து அலாரிப்பு,நவரசம் பொங்கிவர, பாரதியார் பாடல்,ஒன்பது பாடல் எடுத்து நவரசமாக பிழிந்து சாறாக பருகத்தந்தனர்.கௌத்துவம் சின்னஞ்சிறு கிளிபோல்



## ஜேர்மனியில் அடுத்த தலைமுறையினரின் அரங்கேற்ற நிகழ்வு...

பாரதியாரின் கொஞ்சு மொழி வஞ்சிப்பாவால் அமைந்த பாடல் நாயகிகளுக்கு பச்சை உடையலங்காரம் தன்னெழில் வீசி அம்மன் இணைந்த கதை கௌத்துவ வடிவமைப்பு சிறப்பே.

வர்ணம் மிக மிக அருமை நேரமோ 40 நிமிடத்தில் மேல் தமிழ்த்தாய்,தமிழ்மொழி தமிழ் அன்னையின் சிறப்பு தாளலயம் ,ராகம் நட்டுவாங்கம் ஒரே நேரில் இணைந்தது மிகச் சிறப்பு. நாயகிகளின் உருப்படி அருமையாக அமைந்தது.இப்பாட்டில் இடபெற்ற தமிழர் பண்பாட்டு நானிலமும் அடங்கி,ஒலித்தது. இப்பாட்டை யார்த்தவர் மதுரை முரளிதரன் தமிழர் பண்பாடும் மிளிர்வு.

சிறப்பு நடனம் பாரதியார் பாடல் திக்குத் தெரியாத காட்டில் கண்ணன் பாடல் அணிசேர் கலைஞர்களுடன் அரங்கேற்ற நாயகிகள் நட்டுவாங்கத்துடன் நர்த்தனம் புரிந்தது ரசிக்கத்

## புலம்பெயர் நாடுகளில் தமிழும் பாரம்பரிய கலைகளும் வளரும்..

தக்கதாக இருந்தது. முன்னால் நிறுத்திய பாவனை,அடுத்து கீர்த்தனம்,அதையடுத்து பதம்.பதத்திற்கு கம்பராமாயணத்தில் சூர்ப்பனகை மூக்கறுக்கப்பட்ட கதை வடிவமைக்கப்பட்டது. நற்சிந்தனை,நனிமிகு சித்தரிப்பு,அழகாக இருந்தது.

அடுத்து சிலம்பு நடனம். அது நாட்டிய நாடகமாக பரவலாகச் செய்தாலும்.அதை வேறு விதத்தில் வடிவமைத்து,ஐம்பெருங் காப்பியம் தலை காட்டியது சிறப்பு.அடுத்த தலைமுறைக்கு இதை எடுத்துச் சொன்ன பாங்கு அருமை பாராட்டுக்குரியது. இக் கதைகளை வாசிக்கும் பொறுமை இன்றைய தலைமுறையினரிடம் இல்லை.இருந்தும் இப்படி கலைவடிவங்கள் மூலம் கதை சொன்னால் உள்வாங்குவார்கள். இது பாராட்டுக்குரியது.

நவரசம் அம்மன் கீர்த்தனை அம்மனின் நவரசம் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. அந்த வகையில் நர்த்தனம் வித்தகம் பெற்றது. அதைவிட தில்லானா சுறுசுறுப்பையும் மன மகிழ்ச்சியையும் தந்தது.உருப்படி சந்தம் பிசகாது நர்த்தனம் ஆடியது, ஜதியுடன் சுருதி கலக்கியது.அதை தொடர்ந்து இயற்கையை போற்றி சிறப்பு நடனம். இக்கால கட்டத்தின் அவசியம் அறிந்து அதை மக்களும் உணரவேண்டும். இதைப் பார்த்தாவது சிலர்சிந்திக்கட்டும். எனவே அற்புத சிந்தனை அரங்கேற்ற நிகழ்வுக்கு ஒரு பதிவானது.

இயற்கையை வாழ்த்தித்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுதினார். அதை போன்று நடன ஆசிரியர் நிமலனும் முடிவில் இயற்கையைப் போற்றுவோம் என்று நிகழ்வை அமைத்திருந்தார். இக்கால நிலைமையில் இப்படி பஞ்சபூதங்களை நாமும் வாழ்த்த வேண்டும். அவற்றை வாழ்த்தினால் தான் அதனால் அமைந்த எமது உடலும் அதைப் பேணும்.

ஆக அடுத்த தலைமுறையும் இலக்கிய,இதிகாசத்தை விளங்கி அதை அடுத்தவர்க்கு எடுத்துக்கூறவேண்டும். அப்போதான் நயம் அவர்களிடம் தோன்றும்.நயந்து,வியந்து நம் மொழியின் தாற்பரியத்தை அறியும் ஆர்வம் ஏற்படும்.



இறுதியாக மங்களத்துடன் நிகழ்ச்சி முடிவு பெற்றது. இங்கு பெருமையும் சிறப்பும் யாதெனில் அணிசேர் குழு இளையோர் ஆண்கள்.நிகழ்ச்சி தொகுப்பாளர் ஆணும் பெண்ணும் இணைந்து வழங்கினர்.அதில் இளையவர் முகுந்தனின் தமிழ்ச் சொல் நறுக்குத் தெறித்தாற் போல் அவ்வளவு சொல்வீச்சு,சொல்நயம் பாராட்டுக்குரியது. தமிழ் நீண்டு வாழும் என்பதற்கு இவர்களே சாட்சி.

அரங்கேற்றம் தமிழ் மக்களை ஈர்ப்பதற்கு, அனைத்தும் தமிழில் இருந்ததே. பாரதியார் பாடல் பாமரருக்கும் விளங்கும். இங்கு நின்றார் பாரதியார். இப்போ இருந்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பார் காரணம் அடுத்த தலைமுறை தன் பாக்களை கையிலெடுத்தற்காக எனலாம். முன்பெல்லாம் அரங்கேற்றம் பிறமொழிக்கலப்பு பாடல். ஆனால் இன்று நம் தாய் மொழியில் படைத்து அன்னைத் தமிழுக்கு அர்ப்பணிப்பும் சிறப்புமாகும்.

அடுத்த தலைமுறை இணைந்து அழகிய அரங்கேற்றம் கண்டது. தமிழ்த் தாயின் ஆசியே.வாய்ப்பாட்டு. நட்டுவாங்கம், மிருதங்கம், வீணை, வயலின் அத்தனையும் ஏற்ற இறக்கத்துடன் இணைந்து வழங்கி, அற்புதமாக நிகழ்வை நகர்த்தினர். பார்வையாளர்களை பரவசமாக்கியது என்றே கூறலாம். இயற்கையை போற்றுவோம் பாடலுக்கு தமிழர் பண்பாடு எழுந்து நின்று சபையோர் கரகோஷம் செய்தார்கள். தங்கள் மகிழ்ச்சியையும்,பாராட்டையும் காட்டினர். கண்ணுக்கு,மனதுக்கு,செவிக்கு விருந்தாகியது.

நட்டுவாங்கம்:நிமலன் சத்தியகுமார்(குரு) பாட்டு: திரு நிரூஜன் ஜெகஜோதி. மிருதங்கம்:திரு லகீபன் தர்மபாலன். வயலின்:பிரசாத் பரமேஸ்வரலிங்கம். வீணை:சிவானுஜன் சிவகுமாரன். நிகழ்ச்சி தொகுப்பாளர்கள்:ஐ.பி.சி தொகுப்பாளர் முகுந்தன். திருமதி. அனினா அஸ்வின்.செல்வி. ஷாமிலி அசோகன்.செல்வி. தகாலினி அசோகன். இவர்கள் அனைவரும் இங்கு பிறந்து தமிழுடன் கலைகளையும் பயின்று வளர்ந்தவர்களாவர். இளையோராலே இளையோரின் அரங்கேற்ற நிகழ்வு சிறப்புக்கண்டது என்பது பெருமையான விடையமாகும்

ஆடற்கலாலத்தால் கடந்த முப்பது வருடங்களாக யேர்மனியில் இருபது அரங்கேற்றங்கள் நடாத்தி முடிக்கப்பட்டன. ஆனால் இந்த அரங்கெற்றம் ஒட்டுமொத்தமாக இளைய நடன ஆசிரியரான செல்வன் நிமலன், உட்பட அனைவரும் இளை தலைமுறையினரால் நடாத்திமுடிக்கப்பட்ட முதலாவது அரங்கேற்றம் என்றே கூற வேண்டும். இது ஒரு சாதனை நிகழ்வாகவே கருதலாம். இந்நிகழ்வைக் கண்டுகளித்த சுமார் நாநூறு பேர்வரையான பார்வையாளர்கள் பலர் பெரும் ஆனந்தக் களிப்பில் காணப்பட்டதுடன் அரங்கேற்றம் கண்ட செல்விகளையும் நடன ஆசிரியரையும் பக்கவாத்திய இசைக் கலைஞர்களையும் வெகுவாகப் பாராட்டி மகிந்தனர். அரங்கேற்ற நிகழ்வு மனமகிழ்வுடன், சிற்றுண்டிகள், இராப்போசனம் மேலும் மகிழ்வுதர இரவு பத்துமணியளவில் விழா இனிதே நிகழ்வு கண்டது. நல்லதொரு விழாவைப் பார்த்த மகிழ்வோடு அனைவரும் விடை பெற்றுச் சென்றனர்.

வாழ்க!!.. வளர்க!!...உலகெல்லாம் தமிழும் பாரம்பரிய கலைகளும் பரவட்டும்!..

ஜேர்மனி 'மண்' கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் எழுத்தாளர்..

திருமதி
கெங்கா ஸ்ரான்லி








# கோறளைப்பற்று மத்தி அபிவிருத்தி குழுக்கூட்டம் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி குழுக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் அபிவிருத்தி சம்பந்தமான மீளாய்வு செய்யப்பட்டதோடு, 2022 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவு திட்டத்திற்கான முன்மொழிவுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், உதவி பிரதேச செயலாளர் ரம்ஷியா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ருவைத், பிரதேச சபை செயலாளர் எஸ்.சிஹாப்தீன் மற்றும் உயர் அதிகாரிகள், அரச திணைக்கள அதிகாரிகள், நிறுவனங்களின் தலைவர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி குழுக்கூட்டத்திற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதுடன், தொடர்ச்சியாக சிலகாலமாக அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

# ஊரடங்கு நேரத்தில் மரம் பதுக்கல்



## பல இலட்சம் பெறுமதியான தேக்கு மரக்குற்றிகள் கைப்பற்றல்

(ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு, சந்திவெளிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ஒரு தொகை தேக்கு மரக்குற்றிகள், மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்திவெளி சித்திவிநாயகர் கோவிலுக்குப் பின்புறமாகவுள்ள களப்பு பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருந்த தேக்கு மரக்குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுக்கு நேற்றிரவு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், இன்று அதிகாலை சென்ற மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான குழுவினரே, இந்த முற்றுகையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, சுமார் நான்கரை இலட்சம் ரூபாய் பெறுமதியான 24 தேக்கு மரக்குற்றிகள் மீட்கப்பட்டதாக, மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், தேக்கு மரங்களை கொண்டுசெல்லப் பயன்படுத்தப்படும் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனா தொற்றுநோயால் பாடசாலையை இழந்த கிழக்கு பாலர் குழந்தைகளுக்கு விசேட பணிப் புத்தகம்





( இஃஜாஸ் ஏ பரீட்)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுநோயால் தங்கள் படிப்பை மேற்கொள்ள முடியாத முன்பள்ளி பாடசாலை மாணவர்களின கல்வியை மேம்படுத்த ஒரு விசேட திட்டத்தை உருவாக்க கிழக்கு ஆளுநர் அனுராதா யஹாம்பத் விசேட கவனம் செலுத்தினார்.

அதன்படி, மாகாண முன்பள்ளி பணியகத்தின் தலைவரை ஆளுநர் அறிவுறுத்தினார்,

மாகாண ஒதுக்கீடுகள் மூலம் சிறப்பு நடவடிக்கைகளுடன் ஒரு பணிப்புத்தகத்தை அச்சிடவும் மற்றும் மாகாணத்தில் உள்ள அனைத்து முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கும விநியோகிக்கவும்.நடவடக்கை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் சுமார் 4%,000 முன்பள்ளி மாணவர்கள் முறையான கல்வி இல்லாமல் வீட்டில் உள்ளனர்.

இது 2022 ஆம் ஆண்டில் முதல் வகுப்பில் நுழையும் குழந்தைகளின் முதல் ஆண்டு கல்வித் திறனையும் பாதித்துள்ளது.

அதன்படி, பணியகத்தின் தலைவர் திரு.பிரதீப் தென்னகோன் மற்றும் அவரது பணியாளர்கள் மாணவர்களின் தவறவிட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் ஒரு பணிப்புத்தகத்தை அச்சிட்டு விநியோகிக்கத் தொடங்கினர்.

மற்றும் தொடக்க வெளியீட்டை ஆளுநரிடம் ஒப்படைத்தனர்.திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள மாகாண முன்பள்ளி பணியகத்தில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து முன்பள்ளிகளின் மாணவர்களின் இந்த பணிப்புத்தகத்தை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சஹ்ருது உலருணவு விநியோக திட்டத்தின் கீழ் உலருணவுகள் வழங்கி வைப்பு




(நூருல் ஹுதா உமர்)

அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட அனாதைகள் வலையமைப்பில் இருந்து குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் விசேட தேவையுள்ளோரும், பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து 'சஹ்ருது உலருணவு' விநியோக திட்டத்தின் கீழ் 175 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவர்களுக்கான பொதிகளை காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் வழங்கி இன்று ஆரம்பித்துவைத்தார். இந்நிகழ்வில் எம்.எப்.சி.டி இளைஞர் அமைப்பினர், அக்கரைப்பற்று மெதடிஸ் தேவாலய அபிவிருத்திக்குழு இளைஞர்கள் அம்பாரை மாவட்ட அனாதைகள் வலையமைப்பு மற்றும் மகளீர் அமைப்பினரும் கலந்து கொண்டனர்.

# நிவாரண பொதிகள் வழங்கல்



(அ. அச்சுதன்)

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கெல்விட்டாஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் வழங்கப்பட்ட இந்நிவாரணப்பணியில் மூதூர் பிரதேச செயலகபிரிவில் மூவினங்களையும் சார்ந்த 110குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் எம். முபாரக் தலையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதனையடுத்து மூதூர், கிளிவெட்டி, சேனையூர், கடற்கரைச்சேனை, நாவலடி போன்ற பகுதிகளைச்சார்ந்த மிகவும் வறிய பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்ன.

அகம் நிறுவன இணைப்பாளர், பொ. சற்சிவானந்தம், பொருளாளர் ம. உமாசங்கர் ஆகியோரின் தலமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கெல்விட்டாஸ் அமைப்பின் திட்ட அதிகாரி திரு. சக்தி, பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் கள், அகத்தின் திட்ட அதிகாரி களான சாரங்க்கன், வி. மோகன் மற்றும் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

# மறைந்த எழுத்தாளர் நந்தினி சேவியருக்கு நினைவரங்க நிகழ்வு



(அ . அச்சுதன்)

மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்களுக்கான நினைவரங்க நிகழ்வு சம்பூர் தமிழ்க்கலா மன்றத்தின் ஏற்பாட்டில் 19-09-2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு Zoom செயலினூடாக இடம் பெறவுள்ளது.

கவிஞர் . சம்பூர் சமரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், நிகழ் நிலை ஒருங்கிணைப்பினை கவிஞர் பா. பிரியங்கன் வழிநடத்த , நினைவுப் பகிர்வுகளை பேராசிரியர் பாலசுகுமார், கலாசார உத்தியோகத்தர் வி. குணபாலா, வைத்தியர் அ. சதீஸ்குமார், கவிஞர்களான யோகானந்தன், சச்சிதானந்தம், சுஜந்தன், ஸ்ரீ ஞானேஸ்வரன், அ . அச்சுதன், சி. பிரகாஷ் ஆகியோர்கள் வழங்குவார்கள்.

இரங்கல் கவியினை கவிஞர் சேனையூர் இரத்தினா, கவிஞர் கொட்டிய ஆரன் நடந்த இரங்கற்பாவை கவிஞர் சம்பூர் தில்லைநாதன், கவிஞர்கட்டைபறிச்சான் மதுரன் ஆகியோர்கள் வழங்குவார்கள்.

நந்தினி சேவியர் பாடசாலை தமிழ்ப் பாடப் புத்தகத்திலும் இடம் பிடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீதியில் நிற்கும் அம்மாக்களாக எங்களை எண்ணாது பிள்ளைகளை தேடும் அம்மாக்களாக எண்ணவேண்டும்



(வாஸ் கூஞ்ஞ)

வலிந்து காணாமாக்கள் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் உறவினர்களுக்காக போராடும் நாங்கள் வீதியில் நிற்கும் அம்மாக்களாக எங்களை எண்ணாது பிள்ளைகளை தேடும் அம்மாக்களாக இருக்கின்றோம் என உலக நாடு எங்களை இவ்வாறு எண்ணிக்கொள்ள வேண்டும்.

அன்று நாங்கள் பாதுகாப்பு படையினருக்கு பயந்து வாழ்ந்தாலும் அவர்கள் எமக்கு நம்பிக்கை ஊட்டியமையால் இன்று ஏமாந்தவர்களாக நாங்கள் இருக்கின்றோம். எங்கள் போராட்டமானது நிதிக்காக அல்ல நீதிக்காகவே போராடிக் கொண்டிருக்கின்றோம் என மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சார்பாக இதன் சங்கத் தலைவி மனுவேல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனிவாவில் தற்பொழுது 48 வது அமர்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதை முன்னிட்டு சர்வதேசம் தங்களை திரும்பி பார்க்க வேண்டும் என்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சார்பாக இதன் சங்கத் தலைவி மனுவேல் உதயச்சந்திரா வெள்ளிக்கிழமை காலை ஊடக சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது அவர் தொடாந்து தெரிவிக்கையில்

ஜெனிவாவில் தற்பொழுது 48 வது அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தவேளையில் நாங்கள் ஜெனிவாவின் கவனத்துக்கு கொண்டுவருவதாவது

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அம்மாக்கள் நாங்கள் வீதிகளில் 1500 நாட்களை கடந்து தொடர்ந்து போராடிக் கொண்டு இருக்கின்றோம்.

எங்களுக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும் என்றே நாங்கள் இந்த போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுகின்றோம்.நாங்கள் வீதிகளிலிருந்து போராடுவது ஜெனிவாவுக்கு மட்டுமல்ல உலக நாட்டுக்கே நன்கு தெரியும்.எங்கள் போராட்டமானது நிதிக்காக அல்ல நீதிக்காகவே போராடிக் கொண்டிருக்கின்றோம்.எங்கள் போராட்டமானது உயிரோடு கையளிக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள், உறவினர்களுக்கு என்ன நடந்தது அவர்கள் உயிரோடு இருப்பார்களாகில் மீண்டும் எம்முடன் வந்து சேரவேண்டும் என்பதற்காகவே எங்கள் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.நாங்கள் இழந்த பிள்ளைகள் எல்லோரும் இளம் வயது கொண்ட பிள்ளைகளாகவே காணப்பட்டனர்.

இந்த அரசை நம்பியே நாங்கள் எங்கள் பிள்ளைகளை அவர்களிடம் ஒப்படைத்தோம். யுத்தம் முடிவுற்ற கையோடு உங்கள் பிள்ளைகளை நாங்கள் பாதுகாத்து தருவோம் என்று சொன்னபடியால்தான் நாங்கள் நம்பி எங்கள் பிள்ளைகளை அரசை நம்பி எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம்.

நாங்கள் அன்று மன்னார் மாவட்டத்தில் முப்படைகளை நம்பியே மன்னார் பகுதியில் வாழ்ந்தோம். அன்று நாங்கள் பாதுகாப்பு படையினருக்கு பயந்து வாழ்ந்தாலும் அவர்கள் எமக்கு நம்பிக்கை ஊட்டியமையால் இன்று ஏமாந்தவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

எனது மகனை 2008.09.12 ஆம் திகதி எங்கள் வீட்டுக்கு வந்து கடற்படையினர் அழைத்துச் சென்றனர்.

ஆனால் இதுவரைக்கும் எனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்பது தெரியாது இருக்கின்றது.நான் எனது பிள்ளையை தேடி செல்லாத முகாம்களே கிடையாது. அப்படியிருந்தும் இன்னும் கண்டுபிடிக்க முடியாது இருக்கின்றது.எங்களது இறப்புக்கு முன் எங்களது பிள்ளைகள் சம்பந்தமான முடிவு எங்களுக்கு எட்டப்பட வேண்டும்.

எங்களது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என அரசு எமக்கு தெளிவூட்ட வேண்டும் என்றே நாம் கேட்டு நிற்கின்றோம்.

நாங்கள் வீதியில் நிற்கும் அம்மாக்களாக எங்களை எண்ணாது பிள்ளைகளை தேடும் அம்மாக்களாக இருக்கின்றோம் என உலக நாடு எங்களை இவ்வாறு எண்ணிக்கொள்ள வேண்டும்.

ஆகவே சர்வதேசமே இந்த ஜெனிவா அமர்வில் எங்களுக்கு நல்லதொரு முடிவை பெற்றுத்தர வேண்டும் என நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.நாங்கள் இப்பொழுது இலங்கை அரசையோ அல்லது இராணுவத்தையோ நம்பவில்லை. மாறாக சர்வதேசம் ஜெனிவாவிலிருந்து எங்களுக்க நல்லதொரு முடிவை தர வேண்டும் என்றே இப்பொழுது நம்பி இருக்கின்றோம்.

எங்கள் காலத்தில் இதற்கான முடிவு கிட்டாது விடத்து எங்களது காலத்தின் பின் இவைகள் சாட்சிகள் இன்றி அழிந்தவிடும் என அஞ்சுகின்றோம். இதைத்தான் அரசும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் இறந்தாலும் ஒரு தாய் இருக்கும்வரை இதற்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஆகவே சர்வதேசமே இந்த ஜெனிவா அமர்வில் எங்களது பிரச்சனைக்கு தீர்வை பெற்றுத் தர வேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்றார்.











# கொரோனா பாதிப்பால் வாழ்வாதாரத்தினை இழந்த பெண்



நாட்டின் கொரோனா வைரஸ் அதிகரித்துள்ள நிலையில் அன்றாட ஜீவனோபாய தொழிலை மாத்திரம் நம்பி வாழும் பல்வேறு குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்தினை இழந்த நிலையில் காணப்பட்டு வருகின்றனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படும் நிலையில் அன்றாட தொழிலாளர்கள் முதல் அரச உத்தியோகத்தர்கள் சகிதம் தங்களது வாழ்க்கையை திறம்பட நடாத்த முடியாத சூழ்நிலையில் காணப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்தில் ஹஸைனியா வீதியில் வசிக்கும் அமீர்அலி சித்தி சுகைரா (வயது 46) என்பவர் தனது வாழ்வாதாரத்தினை கொண்டு செல்லும் வகையில் கைப்பணிப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகின்றார். தற்காலத்தில் இவரது கைப்பணி வியாபாரம் அனைத்தும் தடைப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.



ந.குகதர்சன்

இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும் உள்ள நிலையில் தனது கணவரின் வருமானம் போதாமை காரணமாக சுமார் பத்து வருடங்களாக களிமண் மூலம் உற்பத்தி பொருட்களும், மூன்று வருடங்களாக சிரட்டை மூலம் பொருட்களையும், நூல் மூலம் தொட்டில் போன்ற உற்பத்திகளை செய்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் விற்பனை செய்து வருகின்றார். நாட்டின் கொரோனா வைரஸ் அதிகரித்துள்ள நிலையில் கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுவதாக ஓட்டமாவடியைச் சேர்ந்த அமீர்அலி சித்தி சுகைரா (வயது 46) என்பவர் கவலை தெரிவித்துள்ளார்.

என்னால் களிமண் மற்றும் சிரட்டை மூலம் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களையும், நூல் மூலம் தொட்டிலினையும் தற்காலத்தில் விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. அத்தோடு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உபகரணம் இன்மையால் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றேன். எனவே எனது கைப்பணியை திறம்பட மேற்கொள்வதற்கு அரச அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி உற்பத்தி செய்வதற்காக உபகரணங்களை வழங்கி எனது உற்பத்தியை மேம்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்வதுடன், என்னால் சுய தொழில் தொழில் செய்ய ஆர்வமாக உள்ள பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கவும் முடியும் என்று தெரிவிக்கின்றார்.

இதற்கு எமது பிரதேச அரச அதிகாரிகள் அக்கறை செலுத்தி கைப்பணி உற்பத்தியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க முன்வருமாறும், எனது கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற வசதிகளை மேற்கொண்டு தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதியின் செளபாக்கியா வேலைத் திட்டத்தில் பெண்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் கைப்பணி உற்பத்திக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்தில் ஹஸைனியா வீதியில் வசிக்கும் அமீர்அலி சித்தி சுகைரா என்பவரது கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கும், இவர் மூலம் பல பெண்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் பயிற்சி வழங்க என்னால் முடியும் என்று வாக்குறுதி வழங்கும் நிலையில் அரச அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

# கற்பித்தல் வெளியில் கலை ஆற்றுகை பயணம்

## கிராமத்து கலைஞன் க.மயில்வாகனம் அவர்களின் நினைவுகள்

செட்டிபாளையம் கிராமத்து கலைத்துவ மரபுகள் நீண்ட பதிவுகளை உடையவை பாவைப்பிள்ளைக் கூத்து நடைபெற்ற கிராமமாக இக்கிராம வரலாற்று பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

செட்டிபாளையத்தை சேர்ந்த கணபதிப்பிள்ளை புலவரும் கவியாற்றல் சோதிடம், வைத்தியம், மாந்திரீகம் முதலியவற்றில் ஈடுபாடு பெற்றிருந்தார். அது மட்டுமன்றி தனது கலைத்தோழன் மாரிலன் என்பவருடன் இணைந்து பாவைப் பிள்ளை கூத்து என்னும் பொம்மலாட்டத்தையும் இக்கிராமத்தில் அரங்கேற்றினார்.

கோயில் திருவிழாக் காலத்திலும் சித்திரை வருடப்பிறப்பு நாட்களிலும் செட்டிபாளையத்தில் பொம்மலாட்டம் நடைபெற்றதை தனது இளமைக்காலத்தில் பார்த்ததாக இக்கிராமத்தில் பிறந்த இலக்கிய கலாநிதி க.தா. செல்வராஜகோபால் பதிவிட்டுள்ளார்.

இத்தகைய கலை முயற்சிகள் 1930 தொடக்கம் 1940 இடைப்பட்ட காலத்தில் செட்டிபாளையம் கிராமத்தின் கலை முகவரிக்கு சான்றானவை.

1943ம் ஆண்டு காலகட்டம் இலங்கை வரலாற்றில் முக்கியமான காலகட்டம் அவ்வேளையில் கல்வித்துறை சார் விசேட குழு அறிக்கை வெளியிடப்பட்டது

கலைகளை சுதந்திரமாக வளர்க்கவும் சுவாசிக்கவும் உரிய தருணங்கள் உருவாக்கப்பட்டன.கவியாக்கம் செய்வது மட்டுமன்றி கவியாற்றுகையிலும் 1940 தொடக்கம் 1950 வரையிலான காலம் செட்டிபாளையம் வரலாற்றில் முத்திரை பொறித்தது.

சமயச் சார்பான பிரபந்தங்களை இயற்றுவதில் செட்டிபாளையம் இரட்டைப்புலவர்கள் பங்களிப்புச் செய்தனர். இக்கிராமத்தை சேர்ந்த கலைஞர்கள் மேஸ்திரிகள் என அழைக்கப்பட்டனர். அவ்வாறு அழைக்கப்பட்டவரே மேஸ்திரிதன்மர் ஆவார். இவர் புலவர் கணபதிப்பிள்ளையின் பாட்டனார் மரச் சிற்ப வேலைகள்,மர வீடுகள் கதவு ஜன்னல்களை கலைத்துவத்துடன் செய்பவர்களே மேஸ்திரிகள் என அழைத்தனர்.

எனவே கணபதிப்பிள்ளை புலவரின் பாட்டனார் காலத்தில் இருந்தே கலை ஆற்றல் மிக்க சமூக கட்டமைப்பு செட்டிபாளையம் கிராமத்தை அடையாளப்படுத்தியது.

இத்தகைய கலை வடிவங்களின் நீட்சி 1950 முதல் 1960 வரையிலான காலகட்டத்தில் இக்கிராமத்தில் செல்வாக்கு பெற்றது.

1960 களை தொடர்ந்து நவீன கலை வடிவங்களாக நிலைமாறு காலம் ஏற்பட்டது. பல்கலைக்கழகம், ஆசிரியர் கல்லூரிகளில் இத்தகைய மாற்றங்கள் போதனைக்குட்பட்டன இந்த காலகட்டமே இக்கிராமத்தின் நவீன கவிதை வெளியாக விசாலித்தது.

இச்சூழலில் கற்பித்தல் வெளியில் உலா வந்த சிந்தனைச்செல்வன்

கா. மயில்வாகனம் கலை வெளியில் சுவாசிக்க தொடங்கினார்.

ஆசிரியர் பயிற்சி கல்லூரி மூலம் புடம் போடப்பட்ட கலைஞர் பளபள என மின்னத்தொடங்கினார்.



தனது முயற்சியை கவிதைக்கே காணிக்கையாக்கினார். ''எந்த நேரம் பார்த்தாலுமே நீங்க ஏதோ ஒன்றை கையில் வைத்து சிந்தனையில் இருப்பதென்ன தெரியாமல் தான் கேட்கிறேனே''(தன்னானே தானதன்னே தான தென்னா தன்னானனா ) கற்பித்தல் வெளியில் கவிஞர் மயில்வாகனம் அவர்களது சங்கமம் 09/11/1959ல் ஆரம்பமானது கொடுவாமடு அ.த.க பாடசாலையில் அவரது முதல் நியமனம், அதனைத் தொடர்ந்து பொலநறுவை மாவட்ட ஹெவம்பிட்டிய,திருகோணமலை மாவட்டத்தில் இறால்குழி, பட்டித்திடல் ஆகிய பாடசாலைகளிலும் சேவையாற்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, தேத்தாத்தீவு, துறைநீலாவணை, அம்பிளாந்துறை, செட்டிபாளையம் ஆகிய கிராமப் பாடசாலைகளிலும் பணி செய்தார். செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் 19%1தொடக்கம் 1983வரை கலையையும் கல்வியையும் சமாந்தர பாதையில் வேருன்ற செய்து பல வாரிசுகளை சமூகத்திற்கு இனங்காணச் செய்தார். இறுதியாக தாழங்குடா பாடசாலையில் அதிபராக பணி செய்தார். பாடசாலை விழாக்களில் கலைவிருந்தளித்தார்

அப்பாடசாலையை தரம் உயர்த்தி அவ்வவூர்மக்களின் இதயத்தில் நீங்கா இடம்பிடித்தார்.

பல பாடசாலைகளுக்கும் பயணம் செய்யும்போதும் தாம் பெற்ற அனுபவங்களே கவிதைக்கு கால்கோள்ளாகின நாடகத்துக்கு நடுகல்லாகியது. இவ்வாறு பாடப்பட்ட கவிதை வெளியில் உள்ளுறையான உணர்வுகள் சித்திரமாகின தினபதி பத்திரிகையின் கவிதா மண்டலத்தில் பதிவாகிய கவிதை நிலவு பெண். நீல கடலாக பெண்ணை வருணித்து நிஜமாகவே தன் மீது காதல் கொண்ட ஒரு பெண்ணை உவமித்த கவிதை அதுவாகும்.

1970களில் மகாகவிருத்திரமூர்த்தி கவிதை என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பின்வரும் பாடலில் காட்டினார்.

**'மின்னல் கடல் சோலை தென்றலை மறவுங்கள் இன்னல் உழைப்பு ஏழ்மைதனைப் பாடுங்கள்''**

என்று கவிதையின் உள்ளடக்கத்தை வரையறை செய்ய கவிஞர் மயில்வாகனமோ கடலை வருணித்து ஒரு பெண்ணின் மன உணர்வு சித்திரத்தை படம் பிடித்தார். அவர் மானுடனை பாடினார் மானுட உணர்வுகள் கவிதைக்குள் கலந்தன.

நதி நங்கை என்னும் மற்றுமொரு கவிதை ஆசிரியர் கலாசாலை காலத்தில் (19681969) ல் கலாசாலை மலரில் வெளிவந்தது. செட்டியூர் சிந்தனைச்செல்வன் பிரபஞ்சவெளி வர்ணனை கவிஞன் அல்ல என்பதை நதி நங்கை புடம் போடுகின்றது நதியை பெண்ணாக்கி வர்ணிக்கும்போது

**''பாடுபட்டே பயிர் செய்திடும் எங்கள் பாட்டாளி மக்களை உயர்த்துகிறாள்''**

என்ற கவிதை வரிகள் 1968இல் பாடப்பட்டதாகும் இன்னலும் உழைப்பும் கலந்து பயிர் செய்யும் பாட்டாளி மக்களை இயற்கை வர்ணனையுடன் இணைத்து பாடிய கவிதை மகாகவிருத்திரமூர்த்தியின் கவிதை வெளி வந்த சூழலிலேயே முகம் காட்ட வைத்தது.

மரபுக் கவிதை வடிவத்தில் புதிய தரவைப் பதிவிறக்கிய அமரத்துவ கவிஞரை இன்றைய அவரது 83ம் (எண்பத்தி மூன்றாம்) பிறந்த நாளில் நினைவு கூருவோம்.

**கவிதை வாழ்க கவிஞன் வாழ்க**

**பே.பேரின்பராசா**
**ஆசிரிய ஆலோசகர்**
**செட்டிபாளையம்.**

# அமரத்துவமடைந்த யாழ். முன்னாள் முதல்வர் போன் சிவபாலனின் 23 ஆவது நினைவு தினம்

எனது நினைவுகளில் சிவபாலன் அண்ணன் ஒரு தனித்த முக்கிய இடத்திலிருப்பவர். காரணம் அவர் எமதூருக்கு அண்மையில் சித்தங்கேணியில் வசித்தவர். எமக்கு உறவினர்கள் பலர் சித்தங்கேணியிலிருப்பதால் (அவரும் உறவினர்தான்) அடிக்கடி சென்றுவருவதுண்டு.

அளவுகடந்த சமய நம்பிக்கையுடன் நிறைந்த கல்வி அறிவும் பேச்சுத்திறனிலும் கவிபாடும் திறமையும் அவருக்குண்டு. ஒரு தடவை (1987ல்)எமதூரில் இடம்பெற்ற இந்து இளைஞர் மன்றத்தின் ஆண்டுவிழாவுக்கு அவரும் புதுவை இரத்தினதுரை போன்ற பலரும் கவி அரங்கிற்கு வந்தவேளை இவர் ஏதாவது இடக்குமுடக்காக கவி பாடுவார் என்று நான் கருதியதும் அப்படியே அவரும் கவிதை வடித்ததையும் இன்று நினைத்துப் பார்க்கின்றேன்.

நான் தமிழர் விடுதலைக் கூட்டணியில் உறுப்பினராக இணைந்தது எனது பெரியதந்தையாரின் மறைவுக்குப்பின் என்றாலும் தொடர்பு ஏற்பட்டது சிறு வயதிலிருந்தே. ஏனெனில் எனது 5ஆவது வயதில் 19%0 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் பெரியப்பா தோல்வியடைந்தபோது இரவிரவாக பலர் வந்த தமது சோகத்தைத் தெரிவித்துச் சென்றதுபற்றி எனது பெரியப்பா என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் (வரலாற்றின் மனிதன் அமிர்தலிங்கம் பவள விழா மலரில் 32வது கட்டுரை) குறிப்பிட்டிருக்கின்றேன்.

அதேநேரம் வீரகேசரியில் வெளியான நம்மவர் நட்புகளை பார்த்தால் கடவுள்தான் வந்தாலும் காப்பாற்றுவாரோ தெரியாது - யாழ் மாநகர உறுப்பினர் உள்ளம் குமுறுகிறார் என்ற தலைப்பிட்டு வீரசேகரியில் 17.04.1999 10ஆம் பக்கத்தில் பிரசுரித்தது.

நான் 20.03.1999 திகதியிட்டு எழுதிய ஈழப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு மனிதாபிமானத்தின் பெயரால் விடுக்கம் பணிவான வேண்டுகோள் என்ற 3 பக்கச் செய்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வரிகளை வீரகேசரி ஓரிரு சொற்களை மாற்றி வெளியிட்டிருந்தாலும் மீண்டும் இன்று இங்கே குறிப்பிடுவது இன்றைய கால கட்டத்திற்குப் பொருத்தமானதென நினைக்கின்றேன்.

ஆயுதக் குழுக்கள் தமக்குள் முட்டி மோதுவதைக் கண்டு உளம் நொந்துபோன யாழ் மாநகரசபை உறுப்பினர் தங்க. முகுந்தன் ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோள் வருமாறு:

தந்தை செல்வா காலத்திலிருந்து அரசியல் நடவடிக்கைகளை அறிந்தவன் என்ற வகையில் இந்த வேண்டுகோள். 1976514 பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்ப மாநாட்டில் பங்கு பற்றியவன் நான்.

தந்தை செல்வா அவர்கள் உதயசூரியன்



கொடியை ஏற்றியபோது பாடல் இசைத்தவன் நான். வீர உணர்வு வரக் கூடிய அந்த அடிகள் இன்னும் என் மனதில் பசுமையாக நிலைத்திருக்கிறது. அதாவது தந்தை வாழ்ந்த நாட்டிலே நம் தாயும் வாழ்ந்த நாட்டிலே சொந்தமற்ற பிரஜையாய் நாம் நிந்தையுற்று வீழ்வதா? என்பதே அந்த வைர வரிகள.; மக்களின் இன்றைய அவல வாழ்வுக்கும் புரையோடிப்போயுள்ள இந்நாட்டின் இனப்பிரச்சனைக்கும் காரணமான ஆயுதப் போராட்டம் இன்று மக்கள் மத்தியில் வெறுப்பையும் ஒருவித விரக்தி நிலையையும் ஏற்படுத்தியுள்ளதை எவரும் நியாய சிந்தனையுடன் பார்க்கும்போது மறுப்பதற்கில்லை. இன்றுள்ள சூழ்நிலையில் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்பதுபோல எதுவுமே எமக்கு வேண்டாம் நிம்மதியாக எமது சொந்த வீடுகளில் இருக்க விட்டாலே போதும் என்ற ஆதங்கமே மக்களிடத்திலே வலுப்பெற்றிருக்கிறது.

சாத்வீகப் போராட்டங்கயோ பேச்சுவார்த்தைகளோ எமது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சரிவராது என்றுகூறி இவற்றை நிராகரித்தும் கொச்சைப்படுத்தியும் விலக்கிவட்டு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த இளைஞர்கள் தமக்குள் பிளவுண்டு நான் என்ற ஆணவத்தாலும் தலைமைப் பதவி மோகத்தினாலும் இன்று தம்மைத்தாமே அழித்துக்கொள்வதோடு எந்த மக்களுக்கு நியாயம் கிடைக்கவெனக் கூறிப் புறப்பட்டார்களோ அந்த மக்களுக்கெதிராகச் சொல்லொணாத வேதனைகளை அளிப்பதும் சிலவேளைகளில் அவர்களது உயிர்களையும் அழிக்கும் போக்கை எண்ணியோ என்னவோ தந்தை செல்வா தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறிச் சென்றார் போலும்.

ஒரு போராட்டத்தை நிராகரித்து அதைக் கொச்சைப்படுத்தி அப்படிச் செய்பவரஇகள் அனைவருமே துரோகிகள் என்று கூறிவிட்டு அதே செயலைத் தாம் செய்யும்பொழுது இதைச் சந்தர்ப்பவாதம் என்பதா? அல்லது அரசியல் சித்தாந்தம் என்பதா?

எது எப்படியாயினும் சிங்கள அரசுகளின் படையினர் செய்த அட்டுழியங்களை எதிர்க்க ஆயுதம் ஏந்திப் புறப்பட்ட எமது இளைஞர்கள் எந்தப் பொது எதிரியை தமது நம்பிக்கைக்குரியவர்களாக கருதி இன்று சொந்த இனத்தினுள் தமது கருத்துக் கொள்கைகளுக்கெதிரானவர்களைக் கொன்று தீர்த்துப் பழிவாங்கப் போனார்கள் என்பதுதான் புரியாத புதிராகவுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய சூழ்நிலையில் விடுதலை காணப் புறப்பட்ட உங்களிடம் மனிதாபிமான ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக விடுக்கும் வேண்டுகோள் இதோ:

எந்த ஒரு மனித உயிரையும் கொல்லாதீர்கள். அது யாராயிருந்தாலும் இனிமேல் ஒருபோதும் வேண்டாம்.

ஆவல வாழ்வின் ஒடுங்கிப்போயுள்ள மக்களை அதிலிருந்து மீட்டெடுக்க உங்கள் அனைத்து முயற்சிகளையும் திரிகரண சுத்தியோடு மேற்கொள்ளுங்கள். அவர்கள் மீது எந்த வன்முறையையும் பிரயோகிக்காதிருங்கள். அவர்களிடமிருந்து வரி மற்றும் தண்டப்பணம் பெறாதிருப்பது குறித்துப் பகிரங்கமான உறுதியுரை வழங்குங்கள்.

ஒருவர்மீது ஒருவர் பழி சுமத்துவதையும் குற்றம் கூறுவதையும் விடுத்து எதிர்காலத்தில் மக்களின் தேவைகளைப் பூரணப்படுத்த ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். மேற்குறிப்பிட்ட முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் மக்கள் மத்தியில் நிலவும் பதற்றத்தையும் சந்தேகங்களை நீக்கி ஒன்றுபட்ட சமுதாயம் சீர்நிலைபெற உறுதுணை புரிவீர்களென எதிர்பார்க்கின்றேன்.

கடந்த 1998 செப்டெம்பர் மாதம் ஆந்திகதி நான் தலைவர் சிவசிதம்பரம் அவர்களை சென்னைக்கு அழைத்துச் செல்லவேண்டியிருந்ததால் சிவபாலன் அண்ணருடன் யாழ்ப்பாணம் வரமுடியவில்லை. இந்தியாவிலிருந்து வருகைதந்த இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகளை வரவேற்கும் நிகழ்வுக்கு அவர் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். 10ஆந்திகதி அவர்களுக்கான வரவேற்பு இந்து விடுதிக் கட்டடத்தில் மிகச் சிறப்பாக மாலையில் நடந்தது. அடுத்தநாள் காலையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர்அதிகாரிகளுடனான கூட்டத்திலேயே கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்! அவருடன் கூடவே யாழ் நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ் பொலிஸ் அத்தியடசகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் மோகனதாஸ், யாழ் நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ் மாநகர சபை எதவி ஆணையாளரும், நிர்வாக அதிகாரியுமான பத்மநாதன், வேலைப்பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோரும் கொல்லப்பட்டார்கள். கடந்த வருடம் கூட்டணிக் காரியாலயத்தை அவரது மறைவு நினைவு நாளன்று பூட்டிவிட்டு கொழும்பு சென்ற செயலாளர் நாயகம் திரு.ஆனந்தசங்கரியின் அடாவடித்தனத்தால், கூட்டணி அலுவலகம் முன் KKS வீதியில் நாம் நினைவை நிகழ்தினோம்.

